223463

# கிராமஊழியன்

1924 மே - ஜூன்

(5)

JL
Y31m N27GR
N24.1.5
223463

|| ஓம் ||

gd. No. M. 1930 வந்தேமாதரம். Annual Subscription . 99

# கிராமானுகூலன்.

# GRAMANUKOOLAN.

(ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.)

புத்தகம் 1. } 1924-வரு மே-ஜுன் மீ ரக்தாக்ஷி வரு வைகாசி மீ { ஸஞ்சிகை. 5.

சந்தா விபரம்.

உள்நாட்டுக்கு வருட சந்தா (தபாற்கூலி உள்பட) ... ரூ. 2—0—0.

வெளிநாடுகளுக்கு " ... ரூ. 2—8—0.

தனிப்பிரதி " ... ரூ. 0—3—0.

விஷயசூசிகை.


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | கிராம உத்தியோகஸ்தர்கள்—(பத்திராதிபர்) | |
| 2. | லோகல் பண்டு ரோட்டுகள் ,, | 98 |
| 3. | மதிப்புரை ,, | 99 |
| 4. | கிராமங்களில் கூட்டுறவு ஜலப்பாய்ச்சல் சங்கம் (ஸ்ரீமான் எஸ். நாராயணசாமி ஐயர், மெலட்டூர்) ... | 100 |
| 5. | தஞ்சை ஜில்லா போர்டு ரோட்டுகளின் நிர்வாகம் (ஸ்ரீமான் வி. பஞ்சாபகேச ஐயர்) ... | 101 |
| 6. | கிராம சீர்திருத்தம் (ஸ்ரீ. கே. கணேசன்) ... | 105 |
| 7. | ஜமாபந்தி (ஒரு கிராம உத்தியோகஸ்தர்) ... | 108 |
| 8. | கூட்டுறவாளர்க்கேற்ற சிலதுறை— (ஸ்ரீமான் ஊ. சா. வேங்கடராம ஐயர்) ... | 109 |
| 9. | காரைக்காலம்மையார் சரித்திரம்— (ஸ்ரீமான்கள் N. பரமசிவ ஐயர் B. A. L. T. V. சந்தானமையங்கார் B. A. L. T.) ... | 113 |
| 10. | இலங்கைக்கூலிகளின் கஷ்டமும் இந்தியாவின் நஷ்டமும்— (ஸ்ரீமான். வே ராகவ ஐயர்.) ... | 115 |
| 11. | பாங்குகளின் முறையும் அவைகளின் உபயோகமும்— (ஒரு பாங்க் காஷியர்) ... | 116 |
| 12. | ராணா பிரதாப சிம்மன் அல்லது ரஜபுத்திர தேசபக்தி— (ஸ்ரீமான் எஸ். மகாலிங்க சர்மா.) ... | 117 |
| 13. | விளம்பரங்கள் | 119–124 |


1 4 OCT 1924

விளம்பர விகிதம்.

பக்கம் 1-க்கு (2 காலம்) மீ 1-க்கு ரூ 10 } { காலம் ½-க்கு மீ 1-க்கு ரூ 2-8-0

பக்கம் ½-க்கு (1 காலம்) ,, 5. } { இஞ்ச் 1-க்கு ,, அணா 8.

நீடித்த விளம்பரங்களுக்கு மானேஜருக்கெழுதித் தெரிந்துகொள்ளவும்.

N. ஆபத்ஸகாய ஐயர்—பத்திராதிபர்.

கிராமானுகூலன் ஆபீஸ்,—கும்பகோணம்.

## கிராமானுகூலனைப்பற்றிய அபிப்பிராயங்கள்.

சுதேசமித்திரன்:—நமது நாடு தினேதினே ராஜீயத் துறையில் அபிவிருத்தியடைந்து வருவதற்கும், மகா ஜனங்களுக்கு ராஜீய விஷயங்களில் சிரத்தை ஏற்பட்டிருப்பதற்கும் ஆங்காங்கு பற்பல பத்திரிகைகள் தோன்றிவருவது சிறந்ததோர் அறிகுறியாகும். இன்னும் தீவிரமான முற்போக்கு நமது நாட்டில் ஏற்படுமாயின் கிராமங்களில் வசிக்கும் எண்ணற்ற ஜனங்கள் ராஜீயவிஷயங்களை நன்றாக அறிந்துகொள்வதற்கு அவசியமான வசதிகள் ஏற்படவேண்டும். அத்தகைய வசதிகளில் பத்திரிகைகள் முக்கியமானவையென்று நாம் கூறத் தேவையில்லை. கிராமங்களில் எவ்வளவுக்கெவ்வளவு பத்திரிகைகள் அதிகமாக உலவுகின்றனவோ அதற்குத்தகுந்தவாறு மகாஜனங்களின் ராஜீய ஞானமும் அபிவிருத்தியடைந்து, பொதுவாழ்வில் ஈடுபடவேண்டுமென்கிற அக்கரையும் அவர்களுக்குதிக்கும். இவ்விதம் கிராமங்களில் உலவக்கூடிய பத்திரிகைகளின் தொகை எவ்வளவு அதிகரித்தாலும் அவை நமது தேசமிருந்துவரும் தற்போதைய நிலைமையில் மிகையாகிவிடா. ஆனால் அத்தகைய பத்திரிகைகள் ஜாதித்துவேஷம், மதத்துவேஷம் முதலியவைகளைக் கிளப்பிவிடாமல், எல்லோரும் இந்தியர்கள், ஒரு தாய்வயிற்றில் பிறந்த மக்கள் என்னும் உணர்ச்சியை ஊட்டக்கூடியவைகளாயும், நாட்டில் நடுநாயகமாக விளங்கும் காங்கிரஸின் கொள்கைகளை அவலம்பனம் செய்பவைகளாயும் இருக்கவேண்டும். கும்பகோணம் ஸ்ரீமான் ஆபத்ஸகாய அய்யர் ஆரம்பஞ்செய்து நடத்திவரும் இந்தப் பத்திரிகையானது நாம் மேலே குறிப்பிட்ட குணங்களனைத்தும் ஒருங்கே அமையப்பெற்றதாய் தேச முன்னேற்றமொன்றையே கருதி உழைக்கக் கூடியதாயிருக்கிறதென்று நம் முன்னிருக்கும் இதழில் அடங்கியிருக்கும் வியாசங்களிலிருந்து தெளிவாகத் தெரிகிறது. இதன் ஆசிரியர் பூர்வாசிரமத்தில் கிராமாதிகாரியாகயிருந்தவர். கும்பகோணம் பாபநாசம் தாலூகாக்களில் ஏற்பட்ட கிராமாதிகளின் வேலைநிறுத்த இயக்கத்தில் முன்னணியில் நின்றுழைத்ததன் பலனாக அதிகாரிகளின் அதிருப்திக்கிலக்காகி உத்தியோகத்தை இழந்தவர். அதுமுதல் தேச சேவையிலீடுபட்டு, தாலுக்கா போர்டு அங்கத்தினர் ஹோதாவிலும், இதரதுறைகளிலும் தேச சேவை செய்துவருகிறார். இத்தகையோர் எடுத்துக்கொண்டிருக்கும் நற்கருமங்கள் பூர்த்தியாகும்படி செய்யவேண்டியது மகாஜனங்களுடையகடமையாகும். நம்முன்னிருக்கும் இதழ்களில் கிராமவாழ்வைச் சீரிடும் மார்க்கங்களைக் குறிப்பிடக்கூடிய பல அரிய வியாசங்கள் அடங்கி யிருக்கின்றன. எல்லோரும் இப்பத்திரிகையைத் தருவித்துப் படிக்கவேண்டுமென்கிற அவாவுடன் வருஷசந்தா மிகக்குறைவாக 2 ரூபாயாக விதிக்கப்பட்டிருக்கிறது. இந்த மாதாந்தப் பத்திரிகையை தமிழ்மக்கள் ஆதரிப்பார்களென்று நம்புகிறோம்.

* * *

தமிழ்நாடு:—கிராமங்களின் அபிவிருத்[தி]ப் பாடுபடும் சிறந்த மாதாந்தப் பத்திரிகை.

* * *

கம்ப நாடர்:—கிராமானுகூலன் கிரவுன் 4 அளவில் உள்ள முதல் மூன்று ஸஞ்சிகைகளும் [கிடைக்]கப் பெற்றோம். இதில் கிராம வாழ்க்கைக் குறி[த்து] முன்னர் கிராமங்கள் இருந்த நிலையைக் குறிப்ப[ிடுக]ிய கிராமப் பஞ்சாயத்து முதலிய வியாசங்கள் [இருக்]கின்றன. பத்திராதிபர் தலைப்பில் குறித்தபடி கிராமங்கள் தோறும் பரவி, அங்குள்ளவர்கள் த[ம்] கடமையை உணரும்படி செய்ய வேண்டுகிறோம்.

* * *

P. V. Jagadisa Ayyar, Archæologi[cal] Dept, Triplicane, writes:—ஐயா, தங்களது ப[த்]திரிகையின் 4 ஸஞ்சிகையை வரப்பெற்றேன். அதைப் பார்வையிட்டதில் அதிலடங்கிய விஷயங்கள் ஜனங்களுக்கு அவசியம் தெரியவேண்டியதாக இருந்து வருகிறது. இம்மாதிரி பத்திரிகை நமது தேசத்து ஜனங்களுக்கு இக்காலத்தில் முக்கியமானது. இதை மாதா மாதம் வெளியிட்டு நமது சிறுவர் சிறுமிகளது அ[பி]விர்த்தியைக் கோறுவீர்களென்று நம்புகிறேன்.

---

### நேயர்களுக்கு.

நிரூப சம்மந்தமான கடிதங்களை மாத்திரம் பத்திராதிபருக்கும், பணம் நிர்வாகம் சம்மந்தமான விஷயங்களைப்பற்றியவைகளை புரொப்ரைட்டருக்கும் அனுப்பிவரவேணுமாய்க்கோருகிறோம்.

புரோப்ரைட்டர், 'கிராமானுகூலன்.



14 OCT 1924

வந்தேமாதரம்

# கிராமானுகூலன்.

[ ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.]

"ஒன்று பட்டாலுண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கி லனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின்நமக்கெதுவேண்டும்"—பாரதி.

நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே.—ஔவை.

புத்தகம் 1. | ரக்தாக்ஷி-ஸ்ரீ வைகாசி-மீ. | ஸஞ்சிகை 5

## கிராம உத்தியோகஸ்தர்கள்.

கிராமங்களை ஒன்றுசேர்த்ததைப் பிரித்துவிட வேண்டுமென்று சட்டசபையில் தீர்மானிக்கப்பட்டதின்பேரில் ஸ்பெஷல் ஆபீஸராக நியமிக்கப்பட்ட திவான் பகதூர் ஆர். ராமச்சந்திர ராவ் அவர்களிடமும், ரெவினியூ மெம்பர் கனம் மகம்மது ஹபிபுல்லா சாகிப் பகதூர் அவர்களிடமும், கிராம உத்தியோகஸ்தர்கள் சங்கத்தின் பிரதிநிதிகள் தூதுபோய்குறைகளைத்தெரிவித்துக் கொண்டார்கள். அந்த சமயத்தில் சட்டசபை மெம்பர்களில் ஸ்ரீமான் T. ஆதிநாராயண செட்டியார் அவர்களும், இன்னும் சில மெம்பர்களும் கூட இருந்து உதவிபுரிந்தார்கள். ஸ்பெஷல் ஆபீஸர் தம்முடைய ரிபோர்ட்டை கவர்ன்மெண்டுக்கு அனுப்பிவிட்டார். அவர் வட்டங்களை ஒன்றுசேர்த்தது பிசகு என்றும், அதனால் வேலை சரிவர நடைபெறு தென்றும், கெடுதல்களே விளைந்திருக்கின்றனவென்றும் வட்டங்களை முன்னிருந்தபடியே பிரித்துவிட்டு அவரவர்கள் வேலையை முன்னிருந்த வர்களுக்கே கொடுத்துவிட வேண்டுமென்றும் அபிப்பிராயப்பட்டிருப்பதாக தெரியவருகிறது. கனம் ரெவினியூ மெம்பரும் வட்டங்களைப் பிரித்துவிடவேண்டியது அவசியமென்பதை தாம் ஒப்புக்கொண்டுவிட்டதாயும், மறுபடியும் அதை அமுலுக்குக் கொண்டுவருகிறதற்காக சட்டசபையில் தாம் ஒரு மசோதா கொண்டுவர வேண்டியிருக்கிறதென்றும், அதை கூடியசீக்கிரம் அதாவது ஆகஸ்டு அல்லது செப்டம்பர் மாதத்தில் கூடும் சட்டசபை கூட்டத்தில் கொண்டுவந்து விடுவதாயும் தெரிவித்தார். முன்னிருந்தபடி வட்டங்களைப் பிரித்துவிட்டு, அவரவர்கள் வேலையைக் கொடுத்துவிடுவதற்கு மாத்திரம் மசோதா கொண்டுவரவேண்டிய அவசியமிராது. இதைக்கொண்டு வேறு என்ன யோசனை கவர்ன்மெண்டாருக்கு உதித்திருக்கின்றனவோவென்று ஐயுறவேண்டியதாயிருக்கிறது. கொண்டுவரும் மசோதாவில் கிராம உத்தியோகஸ்தர்களுக்கு யாதொரு கெடுதியும் விளையக்கூடிய அம்சங்கள் சேர்க்கப்படாமலிருக்க வேண்டுமென்று கவலைப்படுகிறோம்.

கிராம உத்தியோகஸ்தர்கள் இனி உறங்காமல் 'ஏத்தால்வாழலாம், ஒத்தால்வாழலாம்' என்ற பழமொழிகளை சங்கங்களை புனருத்தாரணம் செய்து சரிவர அமைத்துக்கொண்டு ஏன் ஜாக்கிரதையாக வேண்டியதை ஞாபகப்படுத்துகிறோம். சங்கங்கள் சரிவர நடந்துகொண்டிருந்த காலத்தில் தாங்கள் நடத்தப்பட்ட மாதிரியையும், இப்பொழுது நடத்தப்படும் மாதிரியையும் கவனித்துப் பாருங்கள். சங்கங்கள் விஷயத்தில் உண்மையாய் நடந்துகொண்ட சிலருக்குக் கஷ்டம்நேர்ந்தபோதிலும், பொதுவாகப் பார்க்குமிடத்து நன்மையே அதிகமென்று சொல்லத்தேவை இல்லை. கஷ்டப்படாமல் சுகம் இடையாது. பிரிட்டிஷ் அரசாங்கமானது தற்பொழுது தொழிற்கட்சியாரால் ஆளப்படுகிறது. அவர்கள் சரித்திரத்தை வாசித்துப் பார்த்தால் முதலில் அவர்கள் தொழிலாளர் சங்கங்கள் ஏற்படுத்திக்கொண்டு தங்கள் முன்னேற்றத்திற்கு [illegible] காலத்தில் முதலாளிகளாலும், அதிகார வர்க்கத்தினராலும் அடைந்த துன்பங்கள் அளவிலடங்கா. எவ்வளவோ பெயர்கள் வேலை யிழந்தனர், தண்டனை யடைந்தனர், வறுமை நோய்ப்பட்டனர். எப்பாடு பட்டாலும் அவர்கள் ஊக்கத்தைக் கைவிடவில்லை. 'முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்' என்றபடி மேலும் மேலும் உற்சாகத்துடன் சங்கத்தை நடத்தத் தலைப்பட்டனர். வேலையிலிருந்து தள்ளப்பட்டவர்களை சங்கத்தின் உத்தியோகஸ்தர்களாக நியமித்துக்கொண்டு விடாமுயற்சியுடன் சங்கத்தை நடத்திக்கொண்டுவந்து இப்பொழுது அரசாங்கத்தையே கைப்பற்றிக்கொண்டு அவர்களே மந்திரிகளாக யிருந்து ஆக்ஷிபுரிகிறார்கள்.

ஆகையால் சங்கத்தில் முதலில் சிலருக்குக் கஷ்டங்கள் சம்பவிப்பது சகஜமென்பதையும், அதனால் பிறகு நன்மையே விளையுமென்பதையும் கிராம உத்தியோகஸ்தர்கள் மனதில்கொண்டு சங்கத்தைச்சரிவர நடத்தி நன்மையடையவேணுமாய்க் கோருகிறோம்.

---

## லோகல்பண்டு ரோட்டுகள்.

'தஞ்சை ஜில்லா போர்டு ரோட்டுகளின் நிர்வாகம்' என்று ஸ்ரீமான் வி. பஞ்சாபகேசய்யர் எழுதியிருக்கும் குறிப்பை ஒவ்வொரு ஜில்லா போர்டு மெம்பரும், தாலூகா போர்டுமெம்பரும், பிரசிடெண்டுகளும் கவனிக்கவேண்டிய தவசியமாகும். லோகல் போர்டுகளுக்கு வரும் வரும்படிகளில் முதன்மையானது "ரோட்செஸ்" தான். லோகல் போர்டுகள் கவனிக்கவேண்டிய அம்சங்களில் முதன்மையானது ரோட்டுகள் ஏற்படுத்துவதும், அவைகளை பராமரிப்பதுமே? இந்த விஷயம் மிகவும் கேவல ஸ்திதியிலிருப்பது வருந்தத்தக்கதே. இதற்கு பரிகாரம் செய்யவேண்டி ஸ்ரீமான் ஐயர் மிகச்சிரமப்பட்டு கணக்குகளுடன் தயார் செய்திருக்கும் குறிப்பில் கண்டிருக்கிறபிரகாரம் ஏற்பாடு செய்தால் நல்ல பலனுண்டாகுமென்றே நாமும் அபிப்பிராயப்படுகிறோம். கண்டிராக்ட் சிஸ்ட்டம் ஒழிந்து, மைல்கூலி சிஸ்ட்டம் ஏற்படுத்தும் விஷயத்தில் நிர்வகிப்பது கஷ்டம் போல் முதலில் தோன்றக்கூடும். தைரியமாக அநுஷ்டானத்துக்குக் கொண்டுவந்தால் அதனால் கஷ்டமில்லையென்றும், மிகச் சிறந்ததென்றும், லாபகரமானதென்றும் விளங்கும். சுயநலத்தைக் கருதியும், பணத்தாசை கொண்டும் அதிகாரஸ்தானத்தை வகித்து வருகிறவர்களுக்கு கண்டிராக்ட் சிஸ்ட்டம் மிகச் சிறந்ததென்று தோன்றக் கூடும். இதை மெம்பர்கள் உணர்ந்து ஒவ்வொரு தாலூகா, ஜில்லாபோர்டுகளிலும் மைல்கூலி சிஸ்ட்டத்தை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவரும்படி ஏற்பாடுசெய்ய விரும்புகிறோம்.

---



# மதிப்புரை.

### ஈமான்

ஜனாப், பா. தாவுத்ஷா சாகிப் B. A. அவர்களால் இயற்றப்பட்டது. 40 பக்கங்கள் கொண்டது. விலை அணா 4. தாருல் இஸ்லாம் புஸ்தக சாலை, தபால் பெட்டி நெ 15, சென்னை.

இஸ்லாம் மார்க்கத்தின் மூலக்கொள்கையாகிய ஏழு அம்சங்களைப்பற்றிய விஷயங்களை இனிய தமிழில் எளிய நடையில் தெளிவாக வரையப்பட்டிருக்கிறது. இந்நூலாசிரியர் தேசசேவையே பெரிதெனக்கருதி, தமது சப்-மாஜிஸ்திரேட் பதவியை ராஜினாமாக் கொடுத்துவிட்டு, தாருல் இஸ்லாம் பத்திரிகையை நடத்திக்கொண்டு வருகிறார். இங்கிலாந்துக்கும் சென்று திரும்பியவர். நல்ல புத்திமான். இஸ்லாம் மார்க்கத்தின் உண்மைத் தத்துவங்களை பலரும் எளிதில் அறியுமாறு உதவி புரிந்துவருகிறார். ஹிந்து முஸ்லீம் ஒற்றுமை ஏற்படுவதற்கு முஸ்லீமல்லாதவர்களும் இந்நூலைப் படிக்கவேண்டிய தவசியமாகும்.

### தேசீய கீதங்கள்

இயற்றியவர் ஸ்ரீமான் ம. ஷண்முகம்பிள்ளை, மன்னார்குடி. கிடைக்குமிடம் :—காங்கிரஸ் கதர் டிப்போ, மன்னார்குடி.

தேசபக்தி இல்லாதவர்கட்கும் இந்நூல் தேசபக்தி உண்டாக்கும். தெய்வபக்தி, தேசபக்தி நிரம்பித் ததும்பும் இந்தக் கீதங்களை ஸ்திரீகள் பாடினால் அவர்களுக்கும் தேசபக்தி உண்டாகும். வேடிக்கைக்காக பாடும் பாட்டுகளை ஒழிப்பதற்கும் இன்றியமையாதது. விலை ரூ 0—1—6. 0—2—0, 0—2—6.

---

### மெலட்டூர் கூட்டுறவாளர் மகாசபை.

மெலட்டூரில் 8—5—24ல் கூட்டுறவாளர் மகாநாடொன்று நடந்தது. அதில் கூட்டுறவு பண்டகசாலையை (Stores) மிகத்திறமையாய் நடத்தியதற்காக ஸ்ரீமான் எஸ். காசிநாதய்யருக்கு 4 பவுனில் ஒரு தங்கமெடல் பரிசளிக்கப்பட்டது. வட்டியைக் குறைக்கவேண்டுமென்றும், பொறுப்புள்ள மேற்பார்வை யூனியனுக்ச் செய்யவேண்டுமென்றும் இன்னும சிலதீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ஷை யூரில் கூட்டுறவு, நீர்பாய்ச்சல் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஷை யூரில் கூட்டுறவுமுறை மிகுந்த அபிவிர்த்தியடைந்திருப்பதற்கு பிரசிடெண்டு ஸ்ரீமான் எஸ் நாராணசாமிய்யர் காரணமாவார்.

### வாலிப உலகம்.

மாயவரமிருந்து வெளிவரும் ஒரு வாரப் பத்திரிகை. வருட சந்தா உள்ளூருக்கு ரூ. 4. வெளியூருக்கு ரூ. 5. இதன் ஆசிரியர் ஜனாப், க. பொ. முகம்மது இப்ராஹிம். தேச சேவையில் ஈடுபட்டு சிறைபுகுந்தவர். பொதுநல ஊக்கம் மிகுந்தவர். வாலிபர்களே தேச முன்னேற்றத்திற்கு முக்கியஸ்தர்கள் என்ற கருத்துடன் காங்கிரஸ் கொள்கையை அனுசரித்து நடத்தப்படும். இவ்வாலிப உலகத்தை எல்லோரும் ஆதரிப்பார்களாக.

### தொழிற் கல்வி.

திருச்சியிலிருந்து வெளிவரும் ஒரு மாதச் சஞ்சிகை. தொழில் விஷயமாய் அனேக அரிய வியாசங்கள் அடங்கியிருக்கிறது. கைத்தொழில் முன்னேற்றமடைய வேண்டியதற்கு 'தொழிற் கல்வி' மெத்த அவசியமானது. இதன் ஆசிரியர் ஸ்ரீமான் பி. நா. விசுவம், 13, வாணப்பட்டரை, தெப்பக்குளம், திருச்சி.

### தர்ம போதினி.

தர்மபுரியிலிருந்து வெளியாகும் ஒரு மாதச் சஞ்சிகை. சந்தா ரூ. 1—4—0. உபயோகமுள்ள அனேக வியாஸங்கள் பொலிந்து விளங்குகின்றன.

மானேஜர், தர்மபோதினி, தர்மபுரி.

### உத்தம மித்திரன்,

ரெங்கூனிலிருந்து வெளியாகும் ஒரு தினசரி தமிழ் பத்திரிகை. காங்கிரஸ் கொள்கையை அனுசரித்தது. மிகக் குறைந்த சந்தா. வருஷம் 1-க்கு உள்ளூருக்கு ரூ. 7—8—0 வெளியூருக்கு ரூ. 10—0—0.

மானேஜர், உத்தம மித்திரன், ரெங்கூன்

# கிராமங்களில் கூட்டுறவு ஜலப்பாய்ச்சல் சங்கம்.

—:(o):—

(ஸ்ரீமான் எஸ். நாராயணசாமி ஐயர், மிலட்டூர்.)

மிலட்டூர்கிராமமானது (வடமொழியில் உன்னதபுரம்.) தமிழில் மேட்டூர் என்னும்பெயர் மருவிவந்தது. தஞ்சாவூரை யாண்டநாயக்கர் வம்சத்தை ஸ்தாபித்தவரான அச்சுதப்பநாயக்கர் அவர்களால் இவ்வூரில் 510 வீடுகளும் 510 வேலிநிலங்களும், 510 பிராமணர்களுக்குத்தானம் செய்யப்பட்டது. அப்போது ஷடி நிலங்கள் கிராமத்திலுள்ள ஏரிகளாலும், ஆற்றினாலும், சிறு குளங்களாலும் பாய்ச்சப்பட்டு வந்தன. பிறகு நீர்ப்பாசனங்களை ஆற்றிலிருந்து கால்வாய்கள் வெட்டி ஒழுங்குபடுத்தின ஷடி அச்சுதப்ப நாயக்கர் குமாரர் ரகுநாதநாயக்கர் அரசரின் காலத்தில் வெட்டாற்றிலிருந்து 5-ல் 3 பங்கு நிலங்களுக்குப் பாசனங்கள் ஏற்படுத்தப்பட்டன. பாசனங்கள் அபிவிருத்தி யுண்டானவுடனே ஏரிகளும் தரிசாகவிருந்த நிலங்களும் நஞ்சை நிலங்களாக மாற்றப்பட்டுவந்தது. சௌகரியார்த்தம் கிராமத்தை 5 பாகங்களாகப் பிரித்து மிராசுதார்கள் 5 பாகங்களாக 5 வருஷத்துக்கு ஒருதரம் சீட்டுப்போட்டு விழுந்த பாகத்தை அனுபவித்து வந்தார்கள்.

அவ்விதம் நீண்டகாலமாக நடந்துவந்தது. 5 வருஷத்துக்குஒருதரம்மிராசுதார்களில்மாறுதல் ஏற்படுமே தவிர நிலங்களிலும் பயிரிடும் குடிகளிலும் மாறுதல்கள் ஏற்படுவதில்லை. ஒவ்வொரு கரையீட்டிலும் புதிதாக செய்யப்பட்ட நிலங்களை பொதுவில் வைத்துக்கொண்டு அடுத்த கரையீட்டில் அவைகளை 5 பாகங்களாகப்பிரித்துக்கொள்வது வழக்கம்.

இந்த 5 பாகங்களுக்கும் உட்பிரிவுகளிருந்தன. ஒவ்வொரு பாகத்திற்கும் 4 உட்பிரிவுகளுண்டு. சௌகரியமாய் ஜனங்கள் தாங்களே சேர்ந்துகொண்டு மொத்தத்தில் கிராம நிலத்தில் இருபதிலொரு பங்கு நிலங்களுள்ளவர்களாகச் சேர்ந்து, ஒரு பங்காக ஏற்படுத்தி, இந்தப் பங்குக்கு அதிகாரியாகத் தங்களுக்குள் ஒருவரை நியமிப்பது வழக்கம். கிராம விவகாரங்களில் இப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட 20 பேர்களும் அல்லது இவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட 5 பேர்களுமாவது கிராம விஷயங்களை நடத்திவருவது வழக்கம்.

பங்குகளிலிருக்கப்பட்ட ஏழைஎளியவர்களுடைய நஷ்ட நிஷ்டூரங்களை அந்தப்பங்குப் பிரதிநிதியிடத்திலாவது அல்லது அந்தப்பங்கில் இருக்கப்பட்ட பணக்காரரிடத்திலாவது சொல்லிக்கொண்டால் உடனே அவர் தம் காரியத்தை நிறுத்தி இவர்களுடைய கஷ்டநிஷ்டூரங்களைத் தீர்த்துவிடுவதே முக்கியமான காரியமாகக் கொண்டிருந்தனர்.

குடிகளில் ஒருவன் நெல் அளக்காமல் போக்கிரித்தனம் செய்கிறானென்றுமுறையிட்டால் உடனே இவர்கள் அவனை அளக்கும்படியாகச் சொல்லியாவது, அல்லது தன் ஆட்களைக்கொண்டு நேரில் கண்டுமுதல் செய்தாவது இவர்கள் வீட்டில் நெல்லைக் கொண்டுவந்து கொட்டுவதும், குடியானவர்கள் வாரம் கொடுக்கவில்லை என்று முறையிட்டால் வாரத்தை அவர்களே வசூல்செய்து குடிகளிடம் வாங்கிக்கொடுப்பதும், எவ்வித தகரார்கள் ஏர்பட்டபோதிலும் இப்பஞ்சாயத்தே தீர்ப்பதும், குடிகளுடைய பொது விஷயத்திலும் ஜனங்களுடைய பொது விஷயத்திலும் பஞ்சாயத்தார்களே கிராமத்தின் பொது சொத்தைக்கொண்டு செலவுசெய்து சௌகரியம்செய்வதும் வழக்கமாயிருந்தது.

என் குடி, உன் குடி என்றில்லாமல் எந்தக்குடிக்கு வந்த ஆபத்தையும் கிராமத்தின் பொது ஆபத்தாக நினைத்து கிராமத்தின் பொதுசொத்தைக்கொண்டே அவ்வாபத்தைத் தீர்ப்பது நீண்டகாலமாக இருந்து வந்தது. இப்படி பல நூற்றாண்டுகளாக நடந்துவந்தன. பிரதி வருஷமும் நிலங்களை அமானி கண்டுமுதல்செய்து கண்டுமுதல்நெல்லில் ஒருபாகத்தை தானியரூபமாகவே அரசாங்கத்தார் பெற்றுவந்தார்கள். பிறகு ஆங்கில ராஜாங்கம் வந்தவுடன் இப்படியே நடந்துவந்தது. சிலகாலம் கழித்து இவர்கள் தானியரூபமாக வாங்கிவந்ததை மாற்றி நாணயரூபமாக கிஸ்தியைப்பெற ஏற்பாடு செய்தனர். பிறகு சுமார் 10 அல்லது 15 வருஷங்களுக்குப் பிறகு 30 வருஷத்துக்கு ஒருதரம் கொடுக்கும்படியான 'காயம் பைசல்' அல்லது 'செட்டில்மெண்ட் தீர்வை' ஏற்படுத்தினார்கள். இந்த காலத்திலும்கூட கரையீடு அனுஷ்டானத்தில் இருந்துவந்தது. கரையீடு காலங்களில் நிலங்களை சாகுபடி செய்வதும், அதில் விளைந்த மகசூலை மிராசுதார்கள் பாகித்துக்கொள்வதும், கிராமத்தில் பொதுவான பாசன அபிவிர்த்தி, சுகாதாரம், வைத்தியம் முதலிய சகல ஏற்பாடுகளும் ஐக்கியமுறைப்படி நடந்துவந்தன.

(தொடரும்)



# *தஞ்சை ஜில்லா போர்டு ரோட்டுகளின் நிர்வாகம்.

(ஜில்லாபோர்டு மெம்பர் ஸ்ரீமான் வி. பஞ்சாபகேச ஐயர், சேங்காலிபுரம்.)

## மண் ரோட்டுகளின் மராமத்து.

லோகல் போர்டுகளின் முதற்கடமை ரஸ்தாக்களை ஒழுங்காய்வைத்திருப்பது தான் நமது ஜில்லா போர்டின் ஐவேஜியின் பெரும்பாகம் செலவாவதும் அந்த இனத்தில்தான். நமது ஜில்லா போர்டின் ஆதீனத்திலிருக்கும் மொத்தம் ரோட்டுகளின் நீளம் 1923—24 பட்ஜட்டுப்படி மைல் 1310 பர்லாங்கு 6. இதில் கப்பி ரோட்டுகள் மைல் 374-3 பர்லாங்கும். மண்ரோட்டுகள் மைல் 936-3 பர்லாங்கும் ஆகும். இவைகளின் ரிபேருக்கென்று 1923 24ல் மொத்தம் வைக்கப்பட்ட தொகை ரூ 610000 (ஆறுலட்சத்துப் பதினாயிரம்) இதில் கப்பிரோட்டுகளுக்கு ரூ 494900 (ஏறக்குறைய ஐந்து லக்ஷம்). மண்ரோட்டுகளுக்கு ரூ. 115100 (ஒரு லட்சத்துப் பதினையாயிரத்து நூறு.)

1917—18-௵த்தில் ஜில்லா போர்டு எல்லா தாலூகா போர்டுகள் உள்பட மொத்தம் ரஸ்தாக்களுக்கு செலவான தொகை ரூ. 284074 (கொஞ்சம் குறைய மூன்று லக்ஷம்.)

1919—20-௵த்தில் நிர்வாக ரிப்போர்ட்டுப்படி ஜில்லா போர்டு தாலூகா போர்டு எல்லா ரஸ்தாக்களுக்கும் செலவான தொகை பின்வருமாறு:—

| | |
|---|---|
| 23¾ மைல் கப்பிரோட் புதுப்பிக்க | ரூ. 75580 |
| 381⅛ மைல் கப்பிரோட் ரிப்பேர் | ரூ. 115 56 |
| 1452 மைல் மண்ரோட் ரிப்பேர் | ரூ 86278 |
| | ரூ. 277814 |

அதாவது கப்பிரோட்டு புதுப்பிக்க சராசரி மைல 1க்கு ரூ. 3172ம் கப்பிரோட்டு பழுது பார்க்க மைல் 1க்கு ரு. 304ம், மண்ரோட் பழுது பார்க்க மைல் 1க்கு ரூ 60ம் செலவழிந்தது.

1923—24 பட்ஜட் திட்டப்படி பின்வருமாறு:—

| | ரூ. | மைல் 1-க்கு சராசரி |
|---|---|---|
| கப்பி புதுப்பிக்க | ரூ. 200900 | |
| 374⅜ மைல் கப்பிரோட் ரிபேர் | ரூ 293900 | 785 |
| 936⅜ மைல் மண்ரோட் ரிபேர் | ரூ. 115200 | 123 |
| | ரூ. 610000 | |

மேற்கண்ட கணக்குப்படி சென்ற 4 வருஷங்களில் கப்பிரோட்டுகளின் ரிப்பேர் செலவு ஒன்றுக்கு இரண்டரை மடங்குக்கு மேலும், மண்ரோட்டு ரிப்பேர் செலவு ஒன்றுக்கு இரண்டாகவும் உயர்ந்துவிட்டது. இப்படி அதிகச் செலவு செய்தும் ரோட்டுகள் நல்ல நிலைமையிலில்லை.

கப்பி ரோட்டுகள் விஷயத்தில் கப்பி போதுமானபடி கிடைக்கவில்லை என்றும் சாலாகாலத்தில் சப்ளை செய்யமுடியவில்லை யென்றும், ரெயில் சார்ஜ் ஜாஸ்தியும், வாகன்கள் கிடைக்காமையும் காரணங்களாகச் சொல்லப் படுகின்றன. மண் ரோட்டுகளுக்கு இந்தத் தொந்தரவுகள் இல்லை அவைகளே அதிகமாயும், பெரும்பான்மையான ஜனங்களுக்கு உபயோகமுள்ளவைகளாயுமிருக்கின்றன. இவ்வளவு அதிக தொகை செலவு செய்தும் அவைகள் நல்ல நிலைமையில் இல்லை என்பதற்கு தற்போதைய ரிபேர் செய்யும் முறையில் பிசகு இருப்பதைத் தவிர வேறு காரணம் சொல்லமுடியவில்லை.

## கண்டிறாக்ட் சிஸ்டம்.

கண்டிறாக்டர்களுக்கு ரோடு நல்ல நிலைமையிலிருக்கவேண்டுமென்ற பொறுப்பு கிடையாது. எஸ்டிமேட்டில் கண்ட அளவுக்கு மண்மணல் அடித்து அதை அளந்து காட்டும் மட்டும் மண் வெட்டிய பள்ளம் தூர்ந்துவிடாமலும், அடித்த மணல் கரைந்துவிடாமலும் பார்த்துக் கொள்ள வேண்டியதுதான் அவர்கள் பொறுப்பு.

சாதாரணமாய்க் கண்ட்றாக்டர்கள் வருஷத்துக்கு ஒருதரம் அல்லது இரண்டு தடவைதான் ரோட்டில் வேலை செய்கிறார்கள். வேலை செய்த

* இது ஸ்ரீமான் ஐயரவர்களால் போர்டுக்கு அனுப்பப்பட்டதின் குறிப்பு.

பிறகு விழும் குழிகளும் அறுத்தோடிகளும் வருஷம் முழுவதும் கவனிக்கப்படாமல் பெரிதாகி ஜனங்களுக்கு உபத்திரவத்தையும் போர்டுக்கு அதிகச் செலவையும் கொடுக்கிறது. அவை உடனுக்குடன் வேலை செய்தால் இலகுவாயிருப்பதுடன் சவுகரியமாயும் லாபகரமாயுமிருக்கும். கண்ட்ருக்டர்கள் மற்றொரு காரணத்தாலும் அப்போதைக்கப்போது வேலை செய்யக்கூடாதவர்களாயிருக்கிறார்கள். ஏனெனில் அவர்கள் செய்யும் வேலையை அளந்து பார்த்து பணம் கொடுக்கவேண்டியிருப்பதால் ஒவ்வொரு ரோட்டையும் அடிக்கடி அஸிஸ்டெண்டு இஞ்ஜினீர் வந்து அளக்கும்படி அவர்களுக்கு அடிக்கடி வேலை கொடுப்பதில் அவர்கள் அதிருப்திப் படுவதாக சில கண்ட்ருக்டர்கள் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன்.

1919—20 வருஷத்திய ஜில்லா போர்டு அட்மினிஸ்ட்ரேஷன் ரிபோர்ட்டின் 22வது பாராவில் அப்போது பிரசிடெண்டாயிருந்த கனம் வி. கே. ராமானுஜாச்சாரியார் அவர்கள் அடியிற்கண்டபடி சொல்லியிருக்கிறார்கள்.

"மண் ரோட்டுகளின் நிலைமை திருப்திகரமாயில்லை என்று பொதுவாய் புகார் இருக்கிறது. இதற்குக் காரணம் டிஸ்டிரிக்ட் போர்டு இஞ்ஜினீர் மண்ரோட்டுகளை ஏதாவது ஒரு சமயம்தான் பார்க்கிறார் என்பதும், மணல் ரோட்டுகளுக்கு சரியான கணக்குப்படி களி சேர்க்காமல் கீழ் உத்யோகஸ்தர்கள் தவறுதல் செய்வதும் குழிகளையும் அறுத்தோடிகளையும் எப்போதும் கவனிப்பதற்கு பதிலாக வருஷத்திற் கொருதரம் கவனிப்பதேயாகும்"

நான் மேலே சொன்னவைகளிலிருந்து கண்ட்ருக்டர்களை உடனுக்குடன் வேலைகளை செய்து ரோட்டை நல்ல நிலைமையில் வருஷ முழுவதும் வைத்துக் கொள்ளும்படி எதிர்பார்ப்பது முடியாத காரியம்.

மைல்கூலி சிஸ்டம்.

சம்பள ஆசாமிகள் அதாவது மைல்கூலிகள் வைத்து வேலை செய்து வருவது நல்ல ஏற்பாடு என்று படுகிறது. அதிலும் ஒரு மேஸ்திரியிடம் பல ஆள்களைவிட்டு மேஸ்திரியின் பொறுப்பில் எல்லா வேலையையும் செய்வதைக் காட்டிலும், ஒவ்வொரு ஆளுக்கும் தன் பொறுப்பாய் சில மைல்களில் சில வேலைகளைக் கொடுப்பது மிகவும் உசிதமென்று என் அபிப்பிராயம். 4 வருஷங்களுக்கு முன் மண் ரோட்டுகளுக்கு, மைல் ஒன்றுக்கு சராசரி 60 ரூபாய் கொடுத்து வந்ததற்கு பதிலாக, சென்ற வருஷத்தில் சராசரி ரூ 123ம் அடுத்த வருஷத்தில் அதற்குமேலும் கொடுப்பதால், இந்த திட்டத்தை மிகவும் சிலாக்கியமாகவும், லாபகரத்துடனும், நடத்தலாமென்பது, என் திடமான அபிப்பிராயம்

பிரேரபணை.

ஒவ்வொரு இரண்டு மைலுக்கும் மாதம் 12 ரூ. சம்பளத்தில் ஒரு ஆசாமி நியமித்து. அப்போதைக்கப்போது விழும் குழிகளையும், அறுத்தோடிகளையும், சேறுகளையும் அதாவது ஒரு ஆளால் செய்யக்கூடிய எல்லா வேலையையும், அவன் தன் பொறுப்பாய் செய்துவிடவேண்டும்.

8 ஆள்கொண்ட 16 மைல் தூரத்தை ஒரு மேஸ்திரியின் சார்ஜில்விட்டு, அதிக ஆள்களைக் கொண்டு செய்யவேண்டிய வேலைகளை மேலதிகாரி தன் பொறுப்பில் ஷை ஆள்களை ஒரு மாசத்தில், சில குறிப்பிட்ட நாள்கள் தன்வசம் வைத்துக்கொண்டு செய்யவேண்டும் ஒவ்வொரு மாதத்திலும் 20உ முடிய தன் ரோட்டிலும் 21உ முதல் மாதக் கடைசிவரை தேவையுள்ள நாட்கள் மேஸ்திரி வசமும், வேலை செய்யவேண்டுமென்று ஏற்படுத்தலாம். வண்டி வைத்து அடிக்க வேண்டிய மணல் சப்ளையை மட்டில், கண்டிராக்டிலாவது, அல்லது டிபார்ட்மெண்டிலேயே வண்டிச் சத்தம் கொடுத்தாவது சப்ளை செய்யலாம்.

செலவு.

இந்த யோசனைப்படி மைல் 1-க்கு செலவு ரூ. 72 ஆகிறது. அதாவது ஒரு அசாமி சம்பளத்தில் பாதி. வண்டிகளைக்கொண்டு செய்யவேண்டிய மணல் சப்ளைதான், கண்ட்ருக்டரைக்கொண்டோ, டிபார்ட்டுமெண்டிலோ, பணம் செலவு செய்யவேண்டிய வேலை. மைல் 1-க்கு ரூ. 100 முதல் 250 வரை சாதாரணமாய் திட்டம் செய்யப்பட்டிருக்கிறது. 1924—25 பட்ஜட்டுப்படி மண்ரோட்டின் சராசரி திட்டம் அதிகமானாலும் 1923—24 பட்ஜட்படி மைல் 1-க்கு திட்டம் சராசரி 123 ரூ. ஆகிறது 72 ரூ. போக சராசரியில் பாக்கியிருக்கும் 51 ரூ. மணல் சப்ளைக்கு மிகவும் அதிகம். மணல் அதிகமாய் வேண்டிய ரோட்டுகளுக்குக்கூட மணல் திட்டம், மைல் ஒன்றுக்கு ரூ 40 தானாகிறது. சில எஸ்டிமேட்டுகளை வரவழைத்து சராசரி பார்த்ததில் மைல் 1க்கு மணல் சப்ளை ரூ 20—8—0 தானாகிறது. அது பின் வருமாறு:—



1923—24ஞூத்து எஸ்டிமேட்கேள்.

| ரோட்டு நெ. | மைல். | மொத்த எஸ்டிமேட் தொகை ரூ. | மணல் சப்ளை ரூ. | மணல் பரத்தல் ரூ. | மண் வேலை ரூ. | பக்கங்களை ஒழுங்குப் படுத்தல் குழிகள் தூர்த்தல். | சேறு எடுத்தல் ரூ. | சில்லரை வேலை ரூ. | சில்லரை மேன்பார்வை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 59 | $8\frac{1}{2}$ | 850 | 326 | 28 | 157 | 238 | 40 | 21 | 40 |
| 6 | $6\frac{1}{8}$ | 700 | 173 | 11 | 255 | 178 | 30 | 18 | 35 |
| 6 | 8 | 800 | 92 | 6 | 369 | 238 | 40 | 15 | 40 |
| 41 | $3\frac{3}{8}$ | 500 | 37 | 4 | 274 | 104 | 20 | 36 | 25 |
| 41 | $6\frac{3}{8}$ | 900 | 39 | 3 | 540 | 208 | 40 | 30 | 40 |
| மொத்தம் | $32\frac{3}{8}$ | 3750 | 667 | 52 | 1595 | 966 | 170 | 120 | 180 |
| சராசரி. | மைல் 1-க்கு | 115 | $20\frac{1}{2}$ | $1\frac{1}{3}$ | 49 | 30 | $5\frac{1}{4}$ | $3\frac{1}{4}$ | $5\frac{1}{2}$ |

மேல்கண்ட கணக்கைப் பார்க்கும்போது இந்த ஏற்பாட்டால் இப்போது செய்யப்படும் செலவுகளைக் காட்டிலும் மிகவும் குறைந்த செலவிலேயே அடங்குமென்பது விளங்கும்.

வேலையின் மேன்பார்வை.

இந்த சம்பள அசாமி ரோட்டை சரியாய் வைத்துக் கொண்டிருக்கிறானென்று மேன்பார்வை பார்ப்பதைத் தவிர, தினசரி வேலை கணக்கு கொடுக்கும்படி கேட்கக்கூடாது. ஏனெனில் இப்போது ரோட்டில் உண்டாகும் கெடுதல்களெல்லாம், முன் ஜாக்கிரதையாய் கவலைப்பட்டு வேலை செய்யத் தவறுவதினாலேயே உண்டாகிறது. ஒரு பொறுப்புள்ள அசாமி, தனக்குப் பின், அதிக வேலை நேராதபடி முன்கூட்டியே ஜாக்கிரதை எடுத்துக் கொள்ளுவான். இதனால் அவனுக்கு எப்போதும் முழுவேலையுமிராமலிருக்கலாம். இதை ஒரு எதிர்கட்சியாய் எடுத்துக்கொள்ளக் கூடாது. தற்கால கண்டிருக்டர்களோவெனில் சுயலாபத்தைக் கருதி பழுதுகள் பெரிதாகி அதிகத் தொகைக்கு வேலை செய்யும் நிலைமைக்கு வரவேண்டுமென்று நினைப்பது சகஜம். இதனால் உண்டாகும் நஷ்டத்தையும் அசௌகரியத்தையும், கவனிக்கும்போது மேல்கண்ட ஆசாமி எவ்வளவுக்கெவ்வளவு வேலையில்லாமலிருக்கிறானோ அவ்வளவுக் கவ்வளவு போர்டுக்கு லாபமும் பொது ஜனங்களுக்கு சவுகரியமும் என்று திருப்

திப்படவேண்டும். மேஸ்திரி பொறுப்பில் ஆள்களை வைத்துக்கொண்டு செய்யும் வேலைகளுக்கு மட்டில் கணக்குக் கொடுத்தால் போதுமானது. ஒவ்வொரு ஆளிடம் ஒரு புஸ்தகமும், ஒவ்வொரு மேஸ்திரியிடம் ஒரு புஸ்தகமும் கொடுத்து அதில் இஞ்சினீர் இலாகா உத்தியோகஸ்தர்கள் உத்திரவுகளையும், லோகல் போர்டு மெம்பர்கள் ரிமாக்குகளையும் எழுதும்படி வைக்கலாம். இஞ்சினீயர் இலாகா உத்தியோகஸ்தர்கள் பரிசோதனையின்போது செய்யவேண்டிய வேலைகளை அதில் பதிந்தால், அவை செய்யப்பட்டனவா வென்று மறுபடி பரிசோதிக்க உபயோகமாயிருக்கும். அந்தந்த ரோட்டின் நிலைமையை பின்னால் அறிய இப்புஸ்தகம் மிகவும் உபயோகமாக யிருக்கும். இப்போது ரோட்டின் நிலைமை தெரியாமல் வீட்டில் உட்கார்ந்தபடி, மணல் வேண்டிய ரோட்டுகளுக்கு களியையும், களி வேண்டிய ரோட்டுகளுக்கு மணலையும், செக்ஷன் வேண்டாத ரோட்டுகளுக்கு செக்ஷனையும், திட்டத்தில் போட்டு பணத்தையும் வீண்செலவு செய்து, ரோட்டையும் கெடுத்து விடாமல் செய்வதற்கு, இப்புஸ்தகம் அனுகூலமாயிருக்கும். இம்முறையால் இஞ்சினீயர் இலாகா உத்தியோகஸ்தர்களின் வேலை பெரும்பாகம் குறையும்.

### மற்றும் சவுகரியங்கள்.

ரோட்டிலிருக்கும் மரங்களை காக்கவேண்டிய பொறுப்பை இவர்கள் வசம் விடலாம். இப்போது மரங்கள் வைப்பதற்கு ஒரு சமயத்தில் பணம் சாங்க்ஷன் செய்து மரம் வைக்கப்படுகிறது. அவைகளை எப்போதும் கவனிக்க பொறுப்பாயுள்ள அசாமி நியமிக்கப்படுவதில்லை. வெகு காலம் காப்பாற்றியும், ஒரு சில நாள் கவனிக்காவிடில் அவையனைத்தும் போய்விடுகின்றன. அவைகள் வைக்கப்பட்டு அழிந்து விட்டன என்ற தகவலும் தெரிவதில்லை. மேலே சொன்னபடி அசாமி யிருந்தால் அப்படி போகும்படி யிராது. மேலும் இப்போது ரோட்டுகளில், மரங்கள் விழுந்து சில மாதங்கள் வரை அப்படியே கிடக்கின்றன. மரங்களின் கிளைகள் கண்டபடி வெட்டப்பட்டுப் போகின்றன. இவைகளை எல்லாம் உடனுக்குடன் கவனித்துக்கொள்ள இந்த ஆசாமிகள் உபயோகமாயிருப்பார்கள்.

---

கும்பகோணம் சிந்தாமணி திரவியசாலையின் சிந்தாமணி ஔஷதங்கள் நமது பார்வைக்குக் கிடைக்கப்பெற்றோம். ஜன அபிமானத்தையும் விசேஷ அனுபவ தேர்ச்சியையும் பெற்ற வைத்தியர்களால் சாஸ்திர முறைப்படி தயாராகி, வருகிறது.

குடும்பத்தியம், கும்மட்டல், அறுவருப்புகள் இல்லாததோடு பற்பல வியாதிகளுக்கும் தகுமானபடி அனுகூலமுண்டாகக்கூடியதாயும் ஏழைகளுக்கும் உதவக்கூடியதாயும் அதிக விலையில்லாததாயுதாயுமிருக்கிறது.

நாம் அனுபவத்தில் பார்த்த ஔஷதங்களும் சிந்தாமணி ஸ்ரீ சற்குரு ரக்ஷையும் நல்ல குணமுடையதே. ரக்ஷைகளைக் குறித்து நம்புகிற சுபாவமில்லாத எமக்கே இந்த தாயித்துக்கும் இவ்வித சக்தி இருக்குமாவென்று தோன்றுகிறது.

இந்த ரக்ஷையின் அதிசயகுணத்தைப்பற்றி எழுத சாத்தியமில்லை. மிக முயற்சித்தும் காலதாமதமாய்க்கொண்டிருந்த காரியங்கள் இரண்டொரு வாரத்தில் திருப்தியாய் முடிந்தது. இதை அணிந்த அன்றுமுதலே நமது சரீரம் சுகமும் மன உற்சாகமும் அடைய ஆரம்பித்தது.

சரீர அசௌகரியத்தாலும் காரியக் கெடுதல்களாலும் துன்புறும் நமது சகோதர கிராமவாசிகளுக்கும் நகரவாசிகளுக்கும் இதைப்பற்றி முழு நம்பிக்கையோடு சிபார்சு செய்கிறோம்.

---

நமது கிராமானுகூலன் பத்திரிகைக்குச் சந்தாதார்கள் சேர்த்துக்கொடுப்பதற்கும், விளம்பரங்கள் சேகரித்துக்கொடுப்பதற்கும் எல்லாவிடங்களிலும் ஏஜண்டுகள் தேவை. கமிஷன் விவரத்திற்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

மானேஜர், கிராமானுகூலன் ஆபீஸ்
கும்பகோணம்.



# கிராமச் சீர்திருத்தம்.

(ஸ்ரீ கே. கணேசன்.)

முப்பத்து மூன்று கோடி ஜனங்களடங்கிய இப்பாரதகண்டத்தில் பெரும்பான்மையான ஜனங்கள் கிராமங்களிலேயே வசிக்கின்றார்கள். வயிற்றுப் பிழைப்பையுத்தேசித்து, உத்தியோகத்திற்காகவோ, படிப்பிற்காகவோ, வியாபாரத்திற்காகவோ சில ஜனங்கள் மட்டும் நகரவாசம் செய்கின்றனர். இந்த நகரவாசிகள், கிராமவாசிகளின் சுகதுக்கங்களை நன்கு அறியமாட்டார்கள். வேளாண்மை என்பது என்னவென்றுகூட அறியாதார் பலருண்டு. இவர்கள் தங்களது லாபத்தைக்கருதுவார்களேயன்றி ஏழைக் கிராமத்தார்களை கவனிப்பதேயில்லை. அவர்கள் என்ன கஷ்டங்களை அனுபவித்தபோதிலும் சரி, எவ்வளவு உயர்ந்த வரிகளினால் நசுக்கப்பட்டபோதிலும சரி, இது நகரவாசிகளுக்கு ஒரு கவலையும் கொடுப்பதில்லை. மகாத்மாஜி கோர்ட்டில் வாக்குமூலம் கொடுத்தபோது, நகரவாசிகள் அன்னிய நாட்டாருக்கு நம் கிராமத்துப்பொருளை அபகரிப்பதில் தரகுகாரர்களா யிருப்பதாகச் சொல்லி யிருக்கின்றார். இதேவிதமான தரகுத்தொழிலை நகரவாசிகள் நடத்துவார்களாகில் கிராமங்கள் சீர்குலைந்து அழிந்துவிடும். அந்தக் கொடும்பாவத்திற்கு நகரவாசிகள் ஆளாகவேண்டியது நிச்சயம்.

### கிராமங்களின் நிலைமை.

தற்காலமிருந்துவரும் கிராமங்களின் நிலைமையை நோக்குமிடத்து உள்ளம் கலங்குகிறது. வறுமை நிமிஷத்திற்கு நிமிஷம் அதிகரித்துக்கொண்டே வருகிறது. வியாதிகளுக்கோ கணக்கு வழக்கில்லை. இவைகளையெல்லாம் தாண்டினால் வரியின் கொடுமையதிகம். கிராமவாசிகளும் நாளடைவில் தங்களது வாழ்க்கை முறையைக் கெடுத்துக்கொண்டார்கள். கள்ளுண்ணல் அதிகரித்துவிட்டது. கட்குடியதிகரிக்கவே, வறுமையும் வியாஜ்யங்களும் அதிகரித்துவிட்டன. தற்காலம் கோர்ட்டுகளில் வரும் வியாஜ்யங்களின் தொகையைக் கணக்கிட்டுப்பார்த்தால் பெரும்பாலானபிராதுகள் கிராமங்களிலிருந்து வந்ததாகவே தெரியும். மிராசுதாரருக்கும், பண்ணையாட்களுக்குமுள்ள ஒற்றுமை யின்னுமதிகமாக விருக்கவேண்டும். சமீப காலத்தில் நடந்த மாப்பிள்ளைக் கலகத்துக்கு முக்கியமான காரணங்களில் மிராசுதார்களுக்கும் பண்ணையாட்களுக்குமுள்ள ஒற்றுமைக்குறைவும் ஒன்று எனச் சொல்லப்படுகிறது. ஒரே கிராமத்தில் வசிக்கும் மிராசுதார்களுக்கும், பண்ணையாட்களுக்கும் ஒற்றுமையில்லாவிடில் கிராமம் க்ஷீணத்தையடையக் கேட்பானேன்? பண்ணையாட்களின் சுகதுக்கங்களைத் தனதெனப் பாவிக்கவேண்டியது மிராசுதாரின் கடமை; மிராசுதாரின் க்ஷேமத்தைக் கோரவேண்டியது பண்ணையாட்களின் கடமை.

தற்கால நாகரிகம் என்ற பித்தம் மெதுவாகக்கிராமங்களிலும் பரவ ஆரம்பிக்கின்றது. ஆனால் நகரத்திலுள்ள கேவலமானஸ்திதியை கிராமங்களின்னுமடையவில்லை. இப்பொழுதே ஜாக்கிரதையாக இல்லாவிடில் கிராமங்களும் தற்கால நாகரீகப் பித்தம் தலைக்கேறி நாசமடைய வாரம்பித்துவிடும். கிராமங்களில் கல்வியபிவிருத்தி போதாது. கிராமவாசிகளில் பெரும்பான்மையோர் எழுதப்படிக்கத் தெரியாமலிருக்கிறார்கள். இப்படி யிருப்பதனால்தான் அவர்கள் தங்களது கஷ்டநிஷ்டூரங்களை வெளியிட்டுச் சொல்லச் சக்தியற்றவர்களாயிருக்கின்றார்கள்.

### சீர்திருத்துவது எப்படி?

இப்படிப்பட்ட நிலைமையிலிருந்து கிராமங்களைச் சீர்திருத்தவேண்டியது ஒவ்வொரு இந்தியரின் கடமையுமாகும். முக்கியமாய் நகரவாசிகளும், மிராசுதார்களுமே இதில் பிரயாசை யெடுத்துக்கொள்ளவேண்டும். நகரவாசிகள் ஏன் பிரயாசை எடுத்துக்கொள்ள வேண்டும்? தற்கால கிராமவாசிகள் அநேகமாய் நகரவாசிகளின் நடை உடை பாவனைகளை பின்பற்றுகிறவர்களாயிருக்கிறார்கள். நகரவாசிகளிடம் அவர்களுக்கு ஓர் விதமான மரியாதை யிருக்கின்றது. நகரத்தார் என்ன செய்கிறார்களோ அதேமாதிரித் தாமும் செய்யவேண்டுமென்று அவாக்கொள்ளுகிறார்கள். ஆகையால் நகரவாசிகள் தங்களது நடை உடை பாவனைகளைச்சீர்திருத்திக்கொண்டால் கிராமவாசிகளு மவ்வாறே செய்வார்கள். நகரத்தார் தற்கால நாகரிக முறைகளை யனுஷ்டித்தால் கிராமத்தாரும் அவ்வாறே செய்வார்கள். ஆதலின் நகரத்தார் பூர்வீக நாகரிகத்தையே அனுஷ்டிப்பாரானால் தேசத்திற்கே அது ஒரு பெரும் உபகாரமாயிருக்கும். முக்கியமாய் கிராமவாசிகளை தற்கால நாகரீக வலையில் வீழாது காத்த புண்யத்தையும் நகரவாசிகளடைவார்கள்.

நகரத்தார் சமயம் வாய்த்தபோதெல்லாம் கிராமத்தாரிடம் நம் நாட்டின் பூர்வீக நாகரிகத்தின் பெருமையைப்பற்றியும், தற்கால நாகரிகத்தைப் பின்பற்றுவதனால் தேசமடைந்த வறுமை நிலைமையைப்பற்றியும்

வற்புறுத்திச் சொல்வது வெள்ளத்திற்கு முன்னணை கோலுவதுபோலாகும். நகரத்தாரிவ்வாறு சொன்னால் கிராமத்தார்கள் சீக்கிரமாகவே அவர்களைப் பின்பற்று வார்கள். அவர்களின்னும் மேனாட்டுநாகரிகத்தில் அழுந்தினவர்களல்லவாதலால், நகரத்தாரைவிட சுலபமாகவே பூர்வீக நாகரீகத்தின் பெருமையை அறிந்துகொள்வார்கள்.

இதுநிற்க, மிராசுதார்களின் கடமை யென்ன வென்று பார்ப்போம். தங்களுக்கும் பண்ணையாட்களுக்குமுள்ள ஒற்றுமையைவளர்ப்பது மிராசுதார்களின் முக்கியமான கடமைகளிலொன்று. இந்த ஒற்றுமை யிருந்தால்தான் இருதிறத்தார்களும் க்ஷேமமடையலாம். மிராசுதாரின் உத்தம குணங்களைக் கண்ட குடியானவன் முன்னிலும்பன்மடங்கு அன்புடனே வேலை செய்து கிராமத்தின் செல்வத்தை யதிகப்படுத்துவான். பண்ணையாளின் ஊக்கத்தைக் கண்ட மிராசுதாரும் அவனிடம் பன்மடங்கு அபிமானங்கொண்டு, அவனது சுகதுக்கங்களை தன் சுகதுக்கங்களாக நினைக்கும்படி நேரிடும் இந்த ஒற்றுமை உள்ளவரையில் கிராமத்திற்கேதாவது குறை உண்டா?

கிராமங்களில் தற்காலத்திலனேக வியாதிகள் பரவியிருக்கின்றன. இவைகளை நீக்குவது மிராசுதார்களின் கடமையாகும். பண்ணையாட்களின் வீடுகள் யாதொரு சுகாதாரக் குறைவுமில்லாம லிருக்கின்றனவா வென்று மிராசுதார்கள் பார்த்துக்கொள்ள வேண்டும். பிறகு ஒவ்வொரு கிராமத்திற்கும் ஓர் வைத்தியசாலை அவசியமாக ஏற்படுத்தவேண்டும். அங்குள்ள வைத்தியரைக் குடியானவர்களிடம் அடிக்கடி சுகாதாரத்தைப் பற்றி பேசச் சொல்லவேண்டும். இவ்வாறு செய்வதினால், கொடிய கொள்ளை நோய்களினால் ஆயிரக் கணக்கான குடியானவர்கள் மரணமடையாமல் தடுத்துக்கொள்ளலாம். இவ்வாறு அடிக்கடி சுகாதாரத்தைப் பற்றிச் சொன்னால் பண்ணையாட்கள் தாங்களாகவே தங்களது வீடு வாசல்களைச் சுத்தமாக வைத்துக்கொள்வார்கள்.

சரீர சுகத்திற்குப் பின்னர் பண்ணையாட்களின் படிப்பைக் கவனிக்கவேண்டும். படிப்பென்றால், கட்டிடம், பெஞ்சு, நாற்காலி, மேஜை இவையெல்லாம் வேண்டாம், தற்காலத்திலுமனேக கிராமங்களில் திண்ணைப் பள்ளிக்கூடங்க ளிருக்கின்றன. அந்தப்பள்ளிக்கூடங்களில் சொல்லிக் கொடுக்கும் படிப்பு சாதாரணமாக பண்ணையாட்களுக்குப் போதுமானது. "ஆங்கிலப் படிப்பு கற்றால்தான் அது உண்மையான படிப்பு" என்ற தீர்மானம் வேண்டாம். மனிதனாய்ப் பிறந்த ஒவ்வொருவனுக்கும், "எண்ணுமெழுத்தும் கண்ணெனத் தகும்" எழுதப் படிக்கத் தெரிந்துவிட்டால், தங்களது அவகாச நேரங்களில் படிப்பை மென்மேலும் அபிவிருத்தி செய்துகொள்ளும்படி பண்ணையாட்களை நாம் கேட்டுக்கொள்ளலாம். பிறகு ஓர் இலவசப் புத்தகசாலையோ தினசரி வர்த்தமானங்களைப் படிக்க இடமோ (Reading Room) ஏற்படுத்தலாம். பகலில் வேலை செய்யும் பண்ணையாட்களுக்கு இராப்பள்ளிக்கூடங்களும் வைக்கலாம். இவ்வளவு சௌகரியங்களையும் மிராசுதார்கள் பண்ணையாட்களுக்குச் செய்து கொடுத்தால் அவர்களதன்பிற்குப்பாத்திரர்களாவார்கள்

தொண்டர்களின் கடமை.

காக்கினாடாவிற் கூடிய தேசீயமகாசபைக்குப்பின் நிர்மாண திட்டத்தைப்பூர்த்தி செய்வதுதான் ஒவ்வொரு தேச ஊழியனின் கடமை என்று தீர்மானிக்கப்பட்டது நிர்மாணத்திட்டத்தின் அடிப்படையான கத்தரபிவிருத்திக்காக "கத்தர் போர்ட்" என்ற சங்கமொன்றையும் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். நிர்மாணத் திட்டம் பூர்த்தி செய்யப்பட வேண்டுமெனில் கிராமங்களில் வேலைசெய்தால்தான் முடியும். தேசத்தின் நிலைமை நகரவாசிகளுக்கு நன்றாய்த் தெரியும். ஆனால் கிரமவாசிகளுக்குத் தெரியவில்லை. நகரங்களில் பிரசாரம் செய்ததினால் நிர்மாணத்திட்டம் சம்பந்தப்பட்டவரையில் திருப்திகரமான பலனடையவில்லை. தேசத்தில் 100-க்கு 5 பேர்தான் முழுமையும் கத்தர் அணிவதாகத்தெரிகின்றது. ஆகையால் அதே கத்தர் பிரசாரத்தை கிராமங்களில் செய்தால் அதிகமான பலனடையலாம். ஏன்? பட்டினி கிடக்கும் குடியானவனுக்கு தேசவறுமையின் கொடுமை தெரியுமேயன்றி, நகரவாசிக்கு அவ்வளவாகத் தெரியாது. நகரவாசிக்கு மாதமுடிவில் பணம் சம்பளமாகவோ, லாபமாகவோ வந்துவிடுகிறது. கிராமவாசியின் நிலைமை அப்படியல்ல. காலத்தில் மழை பெய்யவேண்டும். கஷ்டத்துடன் வயல்களில் வேலை செய்யவேண்டும். தன் வேலையால மிராசுதாரரைத் திருப்தி செய்யவேண்டும், இதற்கிடையில் கொள்ளை நோய்கள் வராமலிருக்க வேண்டும். இவற்றையெல்லாம் தாண்டியபின் வரி அதிகரிக்காம லிருக்கவேண்டும். இவ்வளவு சிரமங்களை மீறியபின்தான் கிராமவாசிக்கு ஒருவேளையாவது கவலையற்ற சாப்பாடு கிடைக்கும். ஆகையால் நாட்டின் வறுமையையும், அதை சீர்திருத்தும் வழியையும் தொண்டர்கள் கிராமத்தாரிடம் சொன்னால் அவர்கள் சீக்கிரமாகவே இவர்களைப் பின்பற்றுவார்கள். அவர்களும் நியாயமான கேள்விகள் கேட்டு தங்களது சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்வார்கள். ஆனால் நகரவாசிகள் தேசநிலைமையை முற்றிலும் நன்குணர்ந்திருந்தாலும், வீணாக குறுக்கு விசாரணைகளிலும் விதண்டாவாதத்திலும் ஈடுபட்டிருக்கிறார்கள்.



இவர்கள் கேள்வி கேட்பதினால் யாதொரு குற்றமுமில்லை. கேள்வி கேட்டபிறகு நிர்மாணத் திட்டத்தையனுஷ்டித்தால் மிகவும் நலமாயிருக்கும். ஆகையால் நகரத்தில் செய்யும் பிரசாரத்தோடுகூட கிராமங்களிலும் பிரசாரம் செய்யவேண்டியதவசியம். கத்தரபிவிருத்திக்கு கிராமங்கள்தான் சரியானவிடங்கள். அங்கேயே உண்டாகும் பருத்தியிலிருந்து கிராமத்து ஆண்பாலர் பெண்பாலரைக்கொண்டு கைராட்டினநூல் தயாரித்து கிராமத்து நெசவாளியைக்கொண்டு கத்தர் நெய்யச் சொல்லி அத்தத்துணியையே கிராமத்தார் உபயோகித்தால் ஏன் அவர்கள் வீணாக கஷ்டப்பட்டுச் சம்பாதித்த பணத்தை அன்னியநாட்டுத் துணிகளை வாங்குவதில் செலவழிப்பார்கள்? வேலையில்லாத காலங்களில் கத்தரை விருத்தி செய்தால், தாங்கள் சம்பாதிக்கும் பணத்தில்கூடக் கொஞ்சம் சேர்த்துக்கொள்ளலாம். நம் நாடு இருக்கும் வறுமையான ஸ்திதியில் ஒரு பைசா அதிகமாய்க் கிடைத்தாலும் அதை ஓர் பெரிய லாபமாகத்தான் நினைக்கவேண்டும். வீணாக்கும் காலத்தை, யாதொரு சிரமமுமின்றி, நிழலில் உட்கார்ந்தபடியே கொஞ்சம் பொருள் சம்பாதிப்பதில் செலவழித்தால் என்ன குறைந்துபோய்விடும்?

கத்தரபிவிருத்திக்குப் பிறகு கிராமப்பஞ்சாயத்து ஏற்படுத்தவேண்டும். இந்த வேலையிலும் மிராசுதார்களின் உதவி அவசியம் கிராமத்தில் செல்வாக்குள்ள நல்ல குணங்களோடுகூடிய பெரிய மனிதர்களைக்கூட்டி பஞ்சாயத்து ஏற்படுத்தவேண்டும். பஞ்சாயத்தின் தீர்மானத்தை அக்கிராமவாசிக ளனைவரும் ஒப்புக்கொள்ளும்படியாயிருக்க வேண்டும். பஞ்சாயத்தார் நம்பிக்கையுள்ள மனிதர்களாயிருந்தால் அவசியம் பஞ்சாயத்தின் தீர்மானம் யாதொரு கஷ்டமுமின்றி நிறைவேறும். இவ்வாறு சச்சரவுகளைத் தீர்த்துவிட்டால் கச்சேரிகளுக்குப் போய் வீணாக ஏழ்மைத்தன மடைய வேண்டாம்.

இதே பஞ்சாயத்தாரைக் கொண்டு கள்ளுண்பதையும் தடுத்துவிடலாம். பஞ்சாயத்தார்கள் செல்வாக்குள்ளவர்களாதலால் அவர்கள் சொற்படி பண்ணையாட்கள் அவசியம் நடப்பார்கள் மிராசுதார்களின் வார்த்தைகளுக்கு மதிப்பு உண்டென்பது உண்மையானால் அவர்கள் தங்களது பண்ணையாட்களைக் குடிக்காமலிருக்கும்படி சொல்லட்டும். பஞ்சாயத்தார்களைக் கொண்டே கள்ளுக்கு மரம் குத்தகை விடுவதில்லையென்று கட்டுப்பாடு செய்துவிடலாம்.

தீண்டாமை.

தீண்டாமை யொழிவதனால் கிராமத்தில் ஒற்றுமை யதிகப்படும். நாம் "தீண்டத்தகாதவர்" என்று ஒரு வகுப்பினரை ஒதுக்கி வைத்ததன் பலனாக உலகிலே நம்மைத் தீண்டத்தகாதவர் ("ஏகாதிபத்யப் பறையர்கள்") எனக் கருதும்படி நேர்ந்துவிட்டது. நம் நாட்டிலுள்ள ஓர் வகுப்பினரை அடிமைகளாய் நடத்தும்வரையில் நமக்கு அடிமைத்தனம் நீங்கக் கடவுள் ஒருபோதும் உதவி செய்யமாட்டார். நம்மிடம் நெருங்காமல் தள்ளிவைத்ததினால், அவ்வகுப்பார் தீச்செயல்களாகிய கள்ளுண்ணல் முதலிய கொடும் செய்கைகளை யாரம்பித்துவிட்டார்கள். அது யாருடைய குற்றம்? தள்ளிவைத்த நம் குற்றமல்லவா? அவர்கள் செய்யும் பாபத்திற்கு நாமல்லவோ ஆளாகவேண்டும்? இவ்வாறு நாம் ஒதுக்கி வைப்போமாகில், அவர்களுக்கும் நமக்கும் உள்ள வித்தியாசங்கள் அதிகரித்துக் கொண்டே போய் கடைசியாக தீராவிரோதத்தில் முடியும். நம் நாடு முன்னேற்றமடைய விரும்பினால் "தீண்டாதார்" எனப்படுவோரின் உதவி அவசியம் வேண்டும். ஜன சமூகத்தில் ஓர் பாகத்தினரைப் பிரித்து வைத்துக்கொண்டு எங்களுக்கு சுயராஜ்யம் வேண்டுமென்றால் அது நகைப்புக்கிடமாகும். தீண்டாமையை ஒழிக்காதவரையில் அவர்கள் நம் நாடு முன்னேற்றமடைவதற்கு முட்டுக்கட்டைகளாகவே யிருப்பார்கள். ஆகையால் தொண்டர்கள், மிராசுதார்களின் உதவியால் தீண்டாமையை ஒழித்தல் வேண்டும்.

ஆகையால் நிர்மாணத் திட்டத்தில் முக்கிய அம்சங்களான கத்தர், தீண்டாமையொழித்தல், மதுவிலக்கு ஆகியவற்றை நிறைவேற்ற கிராமங்கள்தான் சரியான விடங்கள். கிராமங்களிலிருந்து நகரங்களுக்கு படிப்பினை கற்றுக் கொடுக்கவேண்டும். இந்தியாவின் பெரும் பான்மையான ஜனங்கள் கிராமவாசிகளாதலால், பெரும்பான்மையோரான இவர்களைச் சீர்திருத்தம் செய்துவிட்டால் நகரவாசிகளைத் திருப்புவது மிகவும் சுலபமான காரியமன்றோ? காக்கினாடாவில் கூடிய தேசீயமகாசபை அக்கிராசனர் மௌலானா முகமதலி அவர்கள் "கிராமங்களுக்குப் போங்கள்" (Go back to the villages) என்று சொன்னதை மறக்கக்கூடாது. இவ்வாறு கிராமச்சீர்திருத்தம் செய்வதில் எல்லாம் வல்ல இறைவனருள்புரிவாராக.

வந்தேமாதரம்.

(தமிழ் நாடு.)

## நிருப நேயர்களுக்கு,

நிருபங்களை கடிதங்களின் ஒரே பக்கத்தில் தெளிவாக எழுதியனுப்பக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

ப-ர்.

# ஜமாபந்தி.

(ஒரு கிராம உத்தியோகஸ்தர்.)

கிராம உத்தியோகஸ்தர்களால் தயாரிக்கப்பட்டிருக்கும் கிராமக்கணக்குகளை வருஷத்திற்கு ஒருமுறை பஸலி முடிவில் தணிக்கை செய்யப்படுகிற ஒரு ஏற்பாட்டிற்கு ஜமாபந்தி என்று வழங்கப்படுகிறது. ஜமாபந்தி என்னும் சொல்லானது ஜமா—பந்தி என்ற இரண்டு பதங்களொன்று சேர்ந்ததாக விருக்கின்றது. ஜமா என்பதற்கு சந்தோஷகரமான என்றும் பந்தி என்பதற்கு கூட்டம் என்றும் பொருள் ஏற்படுகின்றது எனவே ஜமாபந்தி என்றால் சந்தோஷகரமான கூட்டம் என்று பொருள்படுகின்றது. கிராம உத்தியோகஸ்தர்களில் ஒருவரேனும் தவறாது எல்லோரும் இப்போது நடத்தப்பட்டு வருகிற ஜமாபந்தி என்பதை அடியோடு எடுத்துவிடவேண்டுமென்று வற்புறுத்தி வருகின்றார்களே! அவ்விதமிருக்க அக்காரியத்திற்கு "சந்தோஷகரமான கூட்டம்" என்று பெயர் வழங்கக் காரணம் யாதென்று நேயர்கள் சம்சயிக்கக்கூடும். ஜமாபந்தி எனும் பதமானது 'ஜமாபந்தி ஆபீஸர்' 'ஜமாபந்தி கிளர்க்கு' 'ஜமாபந்தி செக் மிமோ' என்று பிரயோகிக்கப்பட்டு வருகின்றதே தவிர்த்து. 'ஜமாபந்தி கரணம்' என்றாவது, 'ஜமாபந்தி கிராம முன்சீப்பு' என்றாவது கிராம உத்தியோகஸ்தர்களைக் குறிப்பிடவில்லை. ஆகையால் "சந்தோஷகரமான கூட்டம்' என்ற ஷை பதமானது எவரைக் குறிப்பிடுகின்றது என்று நான் விவரிக்கத் தேவையில்லாததாக விருக்கிறது. கிராம உத்தியோகஸ்தர்கள் இச்சந்தோஷகரமான கூட்டத்தாரிடமிருந்து அவர்கள் கோபத்திற்கு ஆளாகாமல் தப்பி வெளிவருகிறதற்குப்படும் கஷ்டமும் நஷ்டமும் சொல்லத் தரமன்று இக்காரியத்திற்காக அவர்களுக்கு ஏற்படும் செலவு குறைந்தது 5 ரூபாய் முதல் 35 ரூபாய்வரையில் அவரவர்கள் உத்தியோகத்திற்கும் அந்தஸ்திற்கும் கிராமங்களின் நிலைமைக்கும் தகுந்தவாறு செலவுசெய்ய நேரிடுகின்றது. இதற்காக இவர்களுக்குக் கொடுக்கப்படும் படித்தொகையோ வெட்டி தலையாரிகளுக்கு ரூபாய் இரண்டரையும் கரணம் கிராமமுன்சீப்புகளுக்கு ஐந்து ரூபாயும் கொடுக்கப்படுகின்றது. இவ்விதம்கொடுக்கப்படும்படித்தொகையும் பாக்கி நாள்களில் வந்துவிட்டு அவசர காரியங்களினாலோ அல்லது வேறு காரணம் பற்றியோ ஜமாபந்தி அன்றையதினம் வரமுடியாவிட்டால் மேற்சொல்லிய "ஜமாபந்திப்படி" பூரா தொகையையும் கொடுக்க மறுதளித்துவிடப்படுகிறது. இது எவ்விதம் நியாயமாகுமென்று விளங்கவில்லை.

இவ்வளவிற்கும் தப்பி ஜமாபந்தி ஆகிவிட்டபோதிலும் அக்டோபர் மாதத்தில் கொடுக்கப்படுகிறது. அக்காலத்தில் கூட ஷை ஸன்மானத்தொகையைப் பெற்றுக்கொள்வதற்குள் ஏற்படும் அசௌகரியங்களோ சிதம்பர ரகசியமாக விருக்கின்றன. எது போனாலும் போகட்டும் என்று எப்படியாவது ஜமாபந்தி தணிக்கையை முடித்துக்கொண்டு போய்விடுவோம் என்று தாலூக்கா ஹெட் குவார்ட்டரிலிருந்து 10, 15 மைல்தூரத்திற்கு அப்பாலிருந்து வருகிற கிராம உத்தியோகஸ்தர்களை வீட்டுக்கவலை ஒருபுறம் வாட்ட பணச்செலவினாலுண்டாகும் தரித்திர நிலைமையும் மனத்தளர்ச்சியும் ஒருபுறத்தில் தாக்க அதிகாரிகளிடம் தங்கள் கணக்குகள் தணிக்கை செய்யப்படவேண்டியதை உத்தேசித்து அவர்கள் தயவிற்கு எதிர்பார்த்து அடைகிற மனக்கிலேசமும் கஷ்டமும் சொல்லத்தரமல்ல. பிரதி கிராமத்திற்கும் ஒரு குமாஸ்தாவை அனுப்பித்தணிக்கை (ஆடிட்) செய்யும்படி கவர்ன்மெண்டார் உத்திரவு செய்வார்களாகில் கவர்ன்மெண்டாருக்கு இப்போது ஏற்படும் கஷ்டமுமிராது. கிராம உத்தியோகஸ்தர்களுக்கும் இவ்வளவு கஷ்டமாவது நஷ்டமாவது ஏற்பட ஹேதுவில்லாமல் போய்விடும். ஆகையால் இது விஷயத்தைப்பற்றி ரிவினியூ இலாகா சீர்திருத்தம் விஷயமாய் விசாரித்து ரிபோர்ட்டு செய்யும்படி ஸ்பெஷல் ஆபீஸராக நியமனம் செய்யப்பட்டிருக்கிற ஸ்ரீமான் திவான் பகதூர் ஆர். ராமச்சந்திராவ் அவர்கள் கவர்ன்மெண்டார் அவர்களுக்கு எடுத்துரைக்க வேண்மாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன். இவ்விஷயத்தை சட்டசபை மூலமாக கவர்ன்மெண்டாருக்கு ஏற்படும் கஷ்டத்தையும் கிராம உத்தியோகஸ்தர்களுக்கு ஏற்படுகிற சிரமத்தையும் விரிவாக எடுத்துரைத்து ஜமாபந்தி எனும் திருவிழாவை அறவே ஒழித்துவிடவேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேணுமாய் எல்லா சட்டசபை மெம்பர்களையும் மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.



# *கூட்டுறவாளர்க்கேற்ற சில துறை.

(கும்பகோணம் டவுன் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமான் ஊ. சா. வேங்கடராம ஐயர்.)

(84-ம் பக்கத் தொடர்ச்சி.)

இத்துணையுங் கூறியவாற்றால் நமது நாட்டில் நடைபெறும் கொடுக்கல் வாங்கல் சங்கங்கள் "பொதுஜனங்களுக்குச் சிக்கன வாழ்க்கையின் உயர்வையும், வட்டித்தொலையால் வரும் இழிவையும் விரிந்துரைக்கவேண்டியது தங்கள் கடமை" என்பதை உணர்ந்து, தற்கால நடைமுறையிற் சிறிது மாறித் தம்மைச்சேர்ந்த அங்கத்தினர்களது வறுமைத்தொல்லையை நீக்கிச்செல்வ நிலைமையை வளர்த்துச்சேர்ந்து தொழில் செய்யத்தக்கவகையில் இனிது நடைபெறுவதே நாட்டிற்குநலம்தருவதாம் என்பது ஒருசிறிதுவிளங்கும விடமைத்துதயல.

இங்ஙனம் உண்டு, உடுத்து, உயிர்வாழுமாற்ற மக்களாவார்க்கு அடுத்தபடியாக வேண்டியது உறைவதற்குத்தக்க வீட்டுவசதி இருக்க வேண்டியதே. இது பெரிதும் நியாயமானது என்பது எவர்க்கும் ஒப்ப முடிந்ததாம். ஒரு பெரியவர் "மக்களாவார்க்குச் சுபகாரியங்களுக்கு வீட்டு வசதிவேண்டியது அத்துணை ஆவசியமன்று; இறத்தற்குத்தவறாது சொந்தவீடு இருந்தே தீரவேண்டும்." என்று கூறியுள்ளது எவ்வளவு ஆழ்ந்தகருத்தைத்தெரிவிக்கின்றது என்பது ஆராயத்தக்கது. இத்தகைய இன்றியமையாத வீட்டு வசதியைப் பெற்றிராதவர் நமது நாட்டிலே பலர் கோடிக்கணக்கில் இன்னும் இருக்கின்றனர். ஒவ்வொருவர்க்கும் சொந்தவீடு இருந்தே ஆகவேண்டும் என்பது ஒத்துக்கொள்ளப் பட்டதாதலின் தம்மைச்சேர்ந்தும் வீட்டு வசதியைப் பெற்றிராத ஒவ்வொருவர்க்கும் அந்த வசதியைத்தேடிக்கொடுக்கமுயல வேண்டியது சமநோக்கினைக் கடைப்பிடித்தொழுகவேண்டிய கடமைபூண்ட கூட்டுறவாளர் ஒவ்வொருவரது தவறாக்கடமையாம்.

இதன் பொருட்டு ஒவ்வொருவரும் தனித்தனி முயலுவதிலும் பலரும் ஒன்று சேர்ந்து முயலுவது நலம் தருவதொன்றாம். அங்ஙனம் முயன்று நீண்டகாலத்திற்குக் குறைந்த வட்டிக்கு அங்கத்தினர்களுக்குப் பொருள் கிடைக்கும்படியான வசதிகளை உண்டு பண்ணிக் கொள்ளல் வேண்டும். நமது நாட்டிலுள்ள நிதிகள், கூட்டுச்சீட்டு முறைகள் முதலியன இந்த வசதிக்குத் தக்க துணைசெய்யக்கூடியன என்பது பலாது கருத்தாம். நமதுநாட்டில் கூட்டுறவு முறையை உற்பத்தி செய்வதற்காகப் பாடுபட்டவர் எனக் கருதப்படும் நெக்கில்ஸன் துரைமகனார் கருத்தும் இதுவே. இவர், இந்த நிதிகள் முதலியவற்றை மேல் நாடுகளிலுள்ள கட்டடச் சங்கங்களுக்கு ஒப்பிட்டுக்கூறியிருக்கிறார் 'இந்தியாவில் இந்தியர்களால் மிக உயர்வாக நடத்தப்படும் மூன்று முக்கியமான ஸ்தாபனங்களுள் ஒன்று' என்று வேற்று நாட்டினராலும் புகழ்ந்து கூறப்பட்ட பெருமைவாய்ந்த மயிலாப்பூர் நிதியின் துணைக்கொண்டு சென்னையிலும், பிற இடங்களிலும் பலர் வீட்டு வசதியைப்பெற்றுள்ளார் என்பது அனுபவத்திற்கண்டது.

இங்ஙனமே, நமது மாகாணத்திலுள்ள பல பட்டணங்களிலும் "பாதிக்காய்கறிக்கு; பாதிக்காய் விதைக்கு" என்பதுபோல நீண்டகாலக்கடனும், குறைந்தகாலக் கடனுமாகச் சேர்த்துக் கொடுத்துவரும் முறைமையும்; "நோய்கொண்ட உடலில் ஒரு பாதியைக் குணப்படுத்தி மற்ற ஒரு பாதியை நோயுடன் விட்டுவைப்பது" என்பது போலப் பாதிக்கடனைக் குறைந்த வட்டிக்கும், பாதிக்கடனை அதிக வட்டிக்கும் கொடுத்துவரும் முறைமையும்; "நாங்கள் ஆதியிற் கொண்ட கொள்கையில் மாறமாட்டோம்" என்று கூறிக்கொண்டு முன்னேற முயலாதிருக்கும் முறைமையும் நீங்கி ஏழுவருஷம், பத்து வருஷம் ஆதிய நீண்டகாலகெடுவுக்குக் கடன் கிடைக்கத்தக்க வசதிகள் ஏற்படல் வேண்டும். இம்முறையும் முற்றும் கூட்டுறவாளராற் கைக்கொள்ளப்பட்டுக் கூட்டுறவு முறையிலேயே நடைபெறுவதுதான் பெரிதும் விரும்பத்தக்கது. மேல் நாடுகளில் இருபது வருஷக் கெடுக்களையுடைய கடன்களும் கொடுக்கப்படுகின்றன என அறிகிறோம். "மனம் இருந்தால் வழிபிறக்கும்" என்பதுபோல் சிறிது முயன்றால் இம்முறை நமது நாட்டில் விரைவிற் பரவிப் பெரிதும் பயன் தந்து உதவும் என்பதற்கு அடியேன் அதிகம் உதாரணங்களை எடுத்துக் கூறவேண்டியதில்லை. வேண்டுவது மனமே.

உழவினர்க்குதவல்.

இனி, மக்களாவார் அடுத்தபடியாக நிலையிட்டுக்கொள்ளவேண்டியது 'உழவினர்க்குதவும் சங்கங்கள்' என்ற சங்கங்களேயே. ஏனெனில், உழவினர்தாம் உலகினர்க்கு வேண்டிய உணவுப்பொருள்களை முட்டுப்பாடின்றிக் கிடைக்கும்படி செய்யக்கூடியவர் ஆதலின் என்க. "பல குடைநீழலும் தங்குடைக்கீழ்க் காண்பர் அலகுடைநீழலவர்" என்பது வாயுறை வாழ்த்து. இப்படிச் சொல்லப்பட்டதும் சிலர் 'உழவினர்க்குதவுவது இன்றியமையாதது" என ஒத்துக்கொண்டு உடனே பரம்பரையாகக் கையாளப்பட்டுவரும் உழுதொழிலில் வேண்டாத மாறுதல்களைக்கூடச் செய்ய முற்படுகின்றனர். மேல்நாடுகளிலிருந்து பலதிறப்பட்ட இயந்திரங்களைக் கொண்டுவர முயலுகின்றனர். அன்னோர் "வேற்றுமொழியை இடையிற் புகுத்த விரும்பிவந்ததனால் வீட்டில் உபயோகப்படுத்த வேண்டியவற்றிற்குக்கூடத் தாய்மொழிப்பெயர் மறக்கப்பட்டு வருகின்றது" என்பதையும் மறந்துவிடுகின்றனர்போலும்!

நமது நாடோ உழுதொழிலுக்குப் பெயர்போனது. உழுதொழிலைத்தான் முதன்மையான தொழிலாகவுங் கொண்டது. நம்மவருக்கு உழுதொழிலுக்கு உதவியாக ஆண்டவனால் அளிக்கப்பட்டன உயிருள்ள இயந்திரங்களாகிய கால்நடை முதலியனவும், நமது நாட்டிலேயே பிறந்து நமது பக்கத்திலேயே இருந்து உண்டு, உடுத்து உதவி உயிர்வாழவேண்டிய கொல்லர், தச்சர் முதலிய சகோதரர்களது உதவியுமே. தற்கால நவநாகரிகத்தார் உயர்வாகக்கருதுவன வேற்று நாட்டார் தமது பொருட்பெருக்கைக் கருதிச்செய்து அனுப்பும் உயிரற்ற இயந்திரங்களையும், அத்தகைய பிற கருவிகளையுமேயாம்.

நமது புராதன சாதனமான கால்நடைகளோ நம்முடைய நிலங்களைப் பலவழிகளாலும் வளப்படுத்தி, நல்ல பொருள்களை உண்டுபண்ணிக்கொடுத்து, நம்மவர்களது உணவுக்கு உபயோகப்படாத வைக்கோல், புல், தவிடு, கழுநீர், கஞ்சி முதலியவற்றைத் தின்று, குடித்து வயிறுவளர்த்து, தங்களுடைய உடல், பொருள் ஆவிகளால் நம்மவர்க்கு வேண்டிய உதவிகளைச் செய்து நம்மை இன்புறச் செய்கின்றன. எஞ்சிய கருவிகளைச் செய்தற்காக அவற்றைச் செய்யும் தொழிலாளர்களாகிய நம்மவர் தங்களது உயிர்வாழ்க்கைக்கு வேண்டிய பொருளுதவிகளைப் பெற்றுவந்தனர். அந்த இயந்திரங்களோ இயங்குவதற்கே வேற்று நாட்டு எண்ணெய் முதலியவைகளை உணவாக விரும்புகின்றன. பல இயந்திரங்கள் கிராமாந்தரங்களில் பயனின்றித் துருப்பிடித்துக்கிடப்பதை அடியேன் அறிவேன். அவைபோதாம் அரும்பாடு பட்டுத்தேடிய பெரும்பொருளை வேற்றுநாட்டிற்குக் கொட்டிக்கொடுக்கத் தூண்டிச் செய்வன. இவை நமது பொருளை நம்மிடத்திலேயே தங்கச்செய்கின்றன. இவற்றால் நமது நாட்டில் உழுதொழில் பெருகி, பண்டங்கள் நிறைதற்குத் துணையாக நமக்கு ஆண்டவனால் அனுப்பப்பட்ட உயிர்க்கருவிகளையே பெரிதும்வளர்த்து நமது நாட்டில் கலத்தைப்பெருக்க முயலுவதையே கூட்டுறவாளர் தமது முதற் கடமையாகக் கொள்ளல்வேண்டும் என்பது போதரும்.

வாயில்லாப்பூச்சிகளும், வன்மையுள்ளவையில் நமக்கு உழைத்துவந்தவைகளும், "என்பும் உரியர் பிறர்க்கு" என்றபடி இறந்தாலும் நமக்கே நல்ல உரம் ஆகத்தக்கவைகளுமான கால்நடைகளை, அவை நமக்குச்செய்த உதவிக்குப்பதிலுதவிபோல அவற்றை உயிர்நீக்குதற்பொருட்டு வேற்று நாட்டிற்கு அனுப்பப்படும் கொடிய வழக்கம் நிறுத்தப்படுதற்கும் கூட்டுறவாளர்கள் பெரிதும் முயலல்வேண்டும். முதலில் உணவுக்குவேண்டிய தானியமணிகளையும், பின்னர் உடைக்குவேண்டிய பயிர்வகைகளையும் செய்துவரவே முயலல்வேண்டும். நமக்குவேண்டியவற்றை விளைவித்துக்கொண்டபிறகே வேற்றுநாட்டிற்குத் தேவையானவற்றைவிளைவித்தல் வேண்டும். "நாடென்ப நாடா வளத்தன" என்பது பொய்யாமொழி. நல்ல விதைகளை உதவல், தக்க எருக்களை ஆக்கல், உரிய கால்நடைகளைப்போற்றல் முதலியவற்றையும் செய்தல் வேண்டும். அதிகம் சொல்லுவானேன்.



நமது பழமையான பெருமையை இழக்காமல் புதியதாக வரக்கூடிய அனைத்துப் பெருமைகளையும் சேர்த்துக் கொள்ளத்தக்கவகையில் நமது தொழிலை வளர்த்தல் வேண்டும். இத்துறையினர்க்கே நமது கூட்டுறவாளர்கள் போதிய உதவியைச் செய்யவும் முன்னதாக முன்வரல் வேண்டும். "கைப்பழத்தை விட்டுத்தொட்டுப் பழத்துக்கு மன்றாடுதல் கூடாது."

தொழிலினர்க்குதவல்.

இங்ஙனம் சங்கஞ்சேர்ந்த இயற்கைப்பொருள்களை உண்டுபண்ணுவதோடுமாத்திரம் நின்றுவிடுவது தேசநலத்தை வளர்த்ததாகமாட்டாது. அப்பொருள்களை உபயோகப்படுத்தக்கூடியவகையில் செயற்கைப்பொருள்களாகவும் செய்துகொள்வது நன்மேலானது. இப்படிச்செய்வதற்கு ஒவ்வொருதொழிலிலும் வல்லவராகப் பலர் ஒன்றுசேர்ந்து தாந்தாம் பயின்றதொழில்களால் வரும் பயனைத்தாமும், நாடும் அனுபவிக்கத்தக்க வசதிகளைச்செய்துகொள்ள முற்படல் வேண்டும். தமக்குவேண்டிய பொருள்களைத் தாங்களே செய்துகொள்ள முயலல் வேண்டும். அக்கால், இயற்கைக்குமாறான செயற்கை இயந்திரங்களைக்கொண்டு—பாடுபட்டு உழைக்கக்கூடிய திடகாத்திரமுள்ள சகோதரர்களது புத்தி சக்தியும், உழைப்பும் நமக்குப்பயன்படாவண்ணம் செய்து, சோம்பேறிகளாக்கிக் கொண்டு—எதனையும் செய்ய முந்துதல் கூடாது.

நமதுபுராதன நூல்களை ஆராய்ந்து பார்க்கப் பார்க்க "நம்மவர் முதலில் இயற்கை நெறியிலேயே ஒழுகிவந்தனர்; அப்பால் செயற்கை நெறியிற்செல்வாராயினர்; தற்காலம் மிக உயர்வாக மதிக்கப்படுகிற ஆகாயக்கப்பல், கம்பியில்லாத் தந்தி, ஆச்சரியகரமான ஆட்கொல்லிகள் முதலிய பல கருவித்தொழில்களையும் கைக்கொள்ளலாயினர்; இங்ஙனமே ஒவ்வொரு துறையிலும் இயற்கையை மறந்து செயற்கைவாய்ப்பட்டனர்; அதன்பயனாக இறுதியில் இயற்கையின் கோபத்திற்கு உள்ளாகி அழிவுறலாயினர்; அப்பால், செயற்கை நெறி தீமையைச்செய்வது; இயற்கைநெறியே இன்பந்தருவது என்பதை அனுபவத்திற்கண்டு 'பழைய நாயாகவே மாறு' என்பதுபோல ஆதி இயற்கை நெறியையே மீட்டும் கைக்கொண்டு அமைதியுடன் அன்புற்று இன்புற்று வாழ்ந்துவந்தனர்; 'தாமின் புறுவ துலகின் புறக்கண்டு—காமுறுவர் கற்றறிந் தார்' என்றபடி தாம் பெற்ற இன்பத்தை இவ்வுலகமும் பெறவேண்டித் தமது கடைசி அநுபவத்தையே கைக்கொண்டு ஒழுகுமாறு நம்மவர்க்கு வற்புறுத்தியும் எழுதியுங் கூறிவைப்பாராயினர்." என்ற வரலாறே உறுதியாகின்றது.

இங்ஙனமிருக்கத் தற்காலத்தில் நமது நாட்டில் நவநாகரிகத்தில் அலைப்புண்ட பலர் அச்செயற்கை இயந்திரங்களுக்கு மயங்கிப்பெரிதும் அத்துறையில் முயல்வாராகின்றனர். அதன் பயனாகப் பல இடங்களிலும் அத்தகைய இயந்திரச்சாலைகள்—தொழிற் சாலைகள்—தோன்றலாயின. அவற்றால் பெரும்பாலாக அடிக்கடி நம்மாற்கேட்கப்படுவது வேலை நிறுத்தம், வேலையில்லாத்திண்டாட்டம், பஞ்சம், வேண்டாப்பொருள்களின் மிகுதி, அமைதியின்மை முதலியவற்றின் பெருக்கமே. இவற்றோடு வேண்டாப் பொருள்கள் வேற்றுநாடுகளிலிருந்து வருவதும் ஒன்று.

நமது நாட்டிலே பல இடங்களிலும் அரிசிமில் என்ற ஒரு வெள்ளம் பெருகிவந்து எத்தனை ஏழைகளின் வாயில் மண்ணைப்போட்டது என்பது கவனிக்கத்தக்கது. "மிஷின் அரிசியினால் தவிட்டுச்சத்துக்குறைந்து மக்களது உடலுக்கு இன்றியமையாது வேண்டப்படும் 'வைட்டமின்ஸ்' என்னும் தவிட்டிலுள்ளசத்து இல்லாமற்போகப் பலர் நோய் வாய்ப்பட நேர்ந்திருக்கிறது; அந்தநோயை நீக்கத் தவிட்டைத் தான் சூடு காட்டி ஒத்தடம் கொடுக்கவேண்டும்." என்று சாஸ்திர ஆராய்ச்சியாளர்களாற் கேட்கப்படுவதை ஆராய்ந்தறிதல் வேண்டாமா? கால் நடைகளுக்கும் மிஷின் தவிடு நோயை உண்டுபண்ணுகின்றது' என்றுகேட்கப்படுவதும் கவனிக்கத்தக்கது.

செற்கைப்பொருள்களின் மாயத்திற்சிக்குண்டு பெரிதும் மயங்கித் தலைவிரித்தாடிய மேல் நாட்

டார் அந்தப்பெரும்பக்கம் தெளிந்து இயற்கை நெறிக்குத் திரும்பி வருவதையும் கூர்ந்து கவனித்தல் வேண்டும். அன்றியும், இத்தகைய் செயற்கை நெறியில் நடைபெறும் தொழில் முறை "பொருளாளர்களைப் பெரும்பொருளாளராகவும், ஏழைகளை மிக்க ஏழைகளாகவுமே" செய்துவரக் கூடியது என்பதையும், நம்மவருடைய இயற்கையான அறிவாற்றல்களை அழித்துவிடும் என்பதையும் உணர்தல் வேண்டும்.

இதனால்; இயந்திரங்களையும், பெருந்தொழிற் சாலைகளையும் அடியேன் முற்றும் வெறுக்கிறேன் என்பதல்ல; எந்தத்தொழில் முறையும் ஒருபுறத்தில் பலரிடம் வறுமைத்துன்பத்தையும் அடிமைத் தொல்லையையும் நிலைநிறுத்தி, வேறொருபுறத்தில் சிலரிடத்திற்பொருட் பெருக்கத்தையும் அதிகாரத் தன்மையையும் வளர்க்கத் தக்கதாக இருத்தல் கூடாது என்பதும், அவரவரிடத்திலுள்ள அறிவு, ஆற்றல், உழைப்பு இவற்றிற்குத் தக்கவாறு ஒவ்வொருவரிடத்திலும் பொருள், நிலைமை, புகழ்முதலியன பரவி இருக்கத்தக்கசமதுறையாகவே நடைபெறவேண்டும் என்பதுமே அடியேனுடைய தாழ்மையான கருத்துக்களாம்.

ஒரு நாட்டிலே அறம் பெருகி அமைதி நிலவி, இன்பந்துய்த்தற்குத் துணையான நல்ல நிலைமை உண்டாவது விரும்பத்தக்கதும் மேலானதுமாம். அங்ஙனம் இன்றி மறம் பெருகி, அடங்காமை நிலவி, துன்பந்துய்ப்பதற்குத் துணையான இழிந்த நிலைமை உண்டாவது விரும்பதக்கதும மேலானதுமாகாது. இத்தகைய இழிந்த நிலைமையை விரும்புவோர் எந்நாட்டிலும் இரார். தலையில் இடிக்கும்வரையில் அலட்சியமாக இருத்தல் அத்துணைக் குற்றமுடைத்தன்று; இடித்த பிறகும் அவ்வழியே அடங்காமற்செல்வது அறிவுடையோர்க்கழகன்று. இயற்கையில் நீங்கிய செயற்கை நெறியால் வருவது நன்மையினும் தீமையே அதிகமாம் என்பது பலரும் அறிந்த உண்மையே.

அன்றியும், ஒவ்வொருசங்கமும் "தன்னால் அறியப்பட்ட சந்தை"யை வைத்துக்கொண்டு—வாங்குவோர்களையும், அவர்களது தேவையையும் முற்கூட்டி அறிந்துகொண்டு—அவர்களின் தேவைக்குத்தக்க பொருள்களையே செய்தல் வேண்டும். வாங்குவோர் இன்மையால் அழிந்துபோன பல்தொழிற்சாலைகளை அடியேன் கண்டிருக்கிறேன். பத்தாயிரக்கணக்கில்—இலட்சக்கணக்கில்—நமது நாட்டுப்பொருளை மேல்நாட்டிற்கு வாங்கிக் கொடுத்த பல இயந்திரங்கள் வேலையின்றித்தூங்குவதையும் கண்டிருக்கிறேன். இன்றும் அத்தகைய நிலைமை நமது நாட்டில் இருக்கின்றது. ஆதலின், நமது தொழிலினர்க்குதவும் சங்கங்கள் தேசநலத்தைக்கருதிப் பெரிதும் இயற்கை நெறியிலேயே ஒழுகி நாட்டினரை இன்புறுத்த முயலுவதைத் தமது முதற்கடமையாகக் கொள்ளல் வேண்டும்.

மொத்தக்கொள்வினை

இனி, இங்ஙனம் முயன்றுவரின் எத்தகைய சிறு கூட்டத்தினர்க்கும் தங்களுக்கு வேண்டிய பண்டங்களை மொத்தமாக வாங்கத்தக்க வசதி தவறாது உண்டாகியேதீரும். ஆண்டாண்டுள்ள பண்டப்பிரிவினைச்சங்கங்கள் ஒவ்வொன்றும் இத்தகைய நிலைமையைச் சந்திக்கும். அக்கால், அவை ஒவ்வொன்றும் தனித்தனித்தமக்கு வேண்டிய பண்டங்களை மாத்திரம் மொத்தமாக வாங்க முயலாது தங்களோடு சேரக்கூடிய எல்லாப்பிரிவினைச் சங்கங்களையும் சேர்த்துக்கொள்ள முயலல் வேண்டும். ஏனெனில், இச்சங்கங்கள் போட்டிபோடும் தீய முறைமையையும், உண்டு பண்ணுவோர் வாங்குவோர் என்ற இரண்டு உரிமையாளர்க்கும் இடையிற் புகுந்து—இரண்டு விலங்குகளுக்கு இடையிற் புகுந்து கலகமூட்டி இரத்தம் குடிக்கமுயலும் நரிபோன்ற தரகர் எனப்படும் ஒரு கூட்டத்தினரால் வரும்தொல்லையையும் விலக்கவே தோன்றின என்பதைக் கூட்டுறவாளர் அனைவரும் அறிவர் ஆதலின் என்க.

இப்படிப் பல பிரிவினைச்சங்கங்கள் ஒன்று சேர்ந்து மொத்தமாகவாங்கிச் சில்லறையாகப் பிரித்தெடுத்துக் கொள்ளத்தக்க நிலைமை உண்

(தொடரும்.)



# காரைக்காலம்மையார் சரித்திரம்.

(ஸ்ரீமான்கள் N. பரமசிவ ஐயர் B.A., L.T., V. சந்தானமையங்கார் B.A., L.T.)

இப்புண்ணிய பூமியாகிய பாரதபூமியில் அவதரித்து பரோபகாரம், தெய்வபக்தி, கற்புடைமை, தர்மசிந்தை முதலிய நற்குணங்களை பூஷணமாகப் பூண்டு அழியாப் புகழையடைந்து ஏனையோரும் சன்மார்க்க நெறியைக் கடைப் பிடிக்குமாறு வழி காட்டிய உத்தம ஸ்திரீகள் அநேகர். இங்கு கூறப்படும் காரைக்காலம்மையார் சரித்திரம் அவ்வித ஸ்திரீ ரத்னங்களின் சரித்திரங்களிலொன்றாகும்.

இப்பொழுது பிரெஞ்சுக்காரர் நகரமாய் வழங்குவதும், துறைமுகங்களின் முக்கியமானதுமாயுள்ள காரைக்காலில் வைசியகுலத்தில் தனதத்தன் என்றோர் உத்தம புருஷனிருந்தார் விசேஷ கடாக்ஷத்தால் பெற்ற அளவற்ற ஐசுவரியத்திற்கதிபதியாகித் தம் திரவியத்தைத் தான தருமங்களில் செலவழித்து தனதத்தனும் அவர் மனைவியும் இல்லறம் நடத்திவரும் காலத்தில் இலக்குமி தேவிபோன்ற ஓர் பெண்மகவைச் சத்புத்திரியாக அடைந்தார்கள். அக்குழந்தைக்குப் புனிதவதியாரென நாமகரணஞ் செய்து தக்க பருவமடைந்தவுடன் கலைகளையும் தர்ம சாஸ்திரங்களையும் ஓதுவித்து அன்புடன் வளர்த்து வந்தார்கள். சுற்றத்தார் அனைவரும் புனிதவதியின் அழகையும், நற்குணங்களையும், சாஸ்திரப் பயிற்சியையுங் கண்டு இக்குழந்தையால் நம் குலத்திற்கு அழியாப் பெருமையும் கீர்த்தியும் உண்டாகுமென்று நிச்சயித்தார். இப்பெண்மணி மங்கைப் பருவமடைந்தவுடன் தக்க குலத்தில் மணஞ் செய்விக்க ஏற்பாடுகள் விமரிசையாய்ச் செய்யப்பட்டன. தஞ்சை ஜில்லாவில் புராதன நகரமாகிய நாகபட்டினத்தில் வைசிய குலத்திற்கே ஓர் திலகம்போல் விளங்கிவரும் நிதிபதி என்பவரின் புத்திரராகிய பரமதத்தனுக்கு அழகும் அழகுக்கேற்ற குணமும், குணத்திற்கேற்ற கல்வியுமுடைய நிகரற்ற புனிதவதியாரை மணஞ்செய்யப் பெரியோர் நிச்சயிக்க, இருதிறத்தாரும் ஒளிகூர்ந்தனர். முகூர்த்தத்திற்கு ஓர் சுபதினமும் குறிக்கப்பட்டது. உற்றார் உறவினர் சூழ, பெரியோர்கள் ஆசிர்வதிக்கக், குறித்த தினத்தில் விவாகம் காரைக்காலில் நடந்தேறியது. தமக்கு ஒரே புத்திரியானதால் தனதத்தர் தம் அருஞ் செல்வக் குழந்தையை விட்டுப் பிரிய மனமில்லாமல் புனிதவதியாருக்கும் அவள் கணவனுக்கும் அங்கே தனி மாளிகையொன்று கட்டுவித்து இல்லறம் நடத்தும்பொருட்டு ஏற்பாடுகள் செய்தனர்

தம்பதிகளிருவரும், "காதலிருவர் கருத்தொத்து ஆதரவு பட்டதே இன்பம்" என்பதை அனுசரித்து இல்லறம் நடத்தி மேன்மேலும் சீரும் சிறப்புமடைந்து வந்தனர். இவ்வாறு தமக்குரிய தொழிலை நடத்திவருங் காலத்தில், ஒருநாள் பரமதத்தனைக் காணும்பொருட்டு வந்த சிலர் இரண்டு மாங்கனிகளைக்கொணர்ந்து கொடுத்தார்கள். வந்தவர்களை உபசரித்து, வந்த காரணத்தை வினவித் தக்க மறுமொழி கூறிப் பிறகு அவரளித்த கனியை இல்லத்திற்கனுப்பினர்.

வீட்டில் சிவனடியார் ஒருவர் கொடிய பசியால் களைப்படைந்து வந்ததைக்கண்ட புனிதவதியார், விரைந்து சென்று வணக்கத்துடன் உபசரித்து ஆசாராதிகளையும் அளித்துத் தம் கணவர் அனுப்பிய மாங்கனிகளிலொன்றையும் திருத்தொண்டர்முன் வைத்தாள். அச்சிவனடியாரும் மிக்க அன்புடன் அளிக்கப்பட்ட உணவை உண்டு புனிதவதியாரை ஆசீர்வதித்துச்சென்றார். பரமதத்தர் வீட்டிற்குச்சென்று ஸ்நாநம் செய்து பூஜைகளை முடித்துப் பிறகு புனிதவதியார் உபசரிக்கப் போஜனம் செய்தார். தாம் அனுப்பிய மாங்கனி இனிப்பாயிருப்பதைக் கண்டு மற்றொன்

றையும் கொண்டுவரக் கட்டளையிட்டார். இவர் வார்த்தைகளைக் கேட்ட புனிதவதியார் திடுக்கிட்டு யாது செய்வதென்றறியாமல் சமையலறைக்குட் சென்று ஈசுவரனைப் பிரார்த்தித்து மனங்கலங்கி நின்றாள். பதிவிரதா சிரோன்மணியாகிய புனிதவதியாரின் வருத்தத்தைக் கண்டு மனமிரங்கிய சிவபெருமான், இன்னது செய்வது என்று தெரியாமல் திகைத்து நிற்கும் புனிதவதியாரின் கரங்களில் ஓர் கனி இருக்கும்படி அருளினார். கருணைக் கடலாகிய சிவபெருமானின் திருவருளை வியந்து கையிலிருந்த மாங்கனியைப் புனிதவதியார் கணவனிடம் சமர்ப்பித்தனள். பரமதத்தனும் கனியை உண்டு "இது நான் அனுப்பிய கனியன்று. இம்மாதிரி ருசியுள்ள பழம் இவ்வுலகிலிருப்பதரிது. இக்கனியின் வரலாற்றைக் கூறுக" என்றான்.

இவ்விரகசியத்தைத் தன் நாயகனுக்குத் தெரிவித்தல் சரியோ என்ற எண்ணம் ஒரு பக்கமிழுக்க, கணவனுக்கு உள்ளதை உள்ளவாறே உரையாமல் மறைப்பது தர்மபத்னிக்கழகல்லவே என்ற எண்ணம் மற்றோர்பக்கமிழுக்க, இவவாறு புனிதவதியாரின் மனம் அல்லற்பட்டுப் பிறகு உண்மை உரைப்பதே சரியெனத் தீர்மானித்து நாதனிடத்துப் பின்வருமாறு கூறினாள்.

"நாத! தாங்கள் வருவதற்குமுன் சிவனடியார் ஒருவர் இங்கு எழுந்தருளினர். அவரை உபசரித்து, தாங்களனுப்பிய கனியொன்றையும் படைத்து அவரை வணங்கி உண்பித்தேன். பிக்ஷை செய்து பிறகு ஆசீர்வதித்துச் சென்றனர். தாங்கள் மற்றொரு கனியைக் கேட்டதும் இன்ன செய்வதென்று தெரியாமல் ஈசனைப் பிரார்த்திக்க அவனருளால் ஒரு மாங்கனி என் கையிலிருந்தது. இதுவே உண்மை. அடியார்க்கருளும் கருணைக் கடலாகிய சிவபெருமானது திருவருளாற் கிடைத்த அதனைத் தங்கள் இலையில் சமர்ப்பித்தேன்" என்றாள்.

தன் மனைவி உரைத்த அதிசயச்செய்தியைக் கேட்டு நம்பாதவனாகி "நீ சொல்வது உண்மையாயின் இன்னுமோர் கனி ஈசனருளால் பெற்று வருக" என்றான். இவ்வார்த்தைகளைக் கேட்ட கற்பிற்கரசி இதென்ன விபரீதமாயிருக்கிறதே என வருத்தமுற்று, 'ஹே! சர்வலோக நாயக, அடியாரை ரக்ஷிக்கும் பரம்பொருளே, பார்வதி பாகனே, இச்சமயம் என்பேரில் கிருபைவைத்தருளவேண்டும்' எனப் பலவாறாகத் துதித்தாள். உண்மையன்பர்களை ரட்சிப்பதே கடமையெனக் கொண்ட சிவபெருமான், புனிதவதியார் கரங்களில் மற்றுமோர் கனியிருக்க அருளினார். இதுவும் அவன் திருவிளையாடலில் ஒன்றெனக் கருதி அக்கனியைக் கணவன் கையில் கொடுத்தாள். பரமதத்தனும் அப்பழத்தைக் கையில் வாங்கினான். உடனே பழம் காணாமல் மறைந்துவிட்டது. இதைக்கண்டு திடுக்கிட்டு, அச்சமுற்று, மெய்சிலிர்த்து நாம் இதுகாறும் நம் மனைவி எனக் கருதிவந்த இம்மங்கை சாதாரண ஸ்திரீயல்லள். தெய்வத்தன்மை வாய்ந்த உத்தமி. இவளை நாம் மனைவியாகக் கொள்ளுதல் சரியன்று. இவள் நம்மால் வணங்கப்படத் தக்கவள் எனக்கருதி சீக்கிரத்தில் ஒருவருமறியாமல் அம்மாதை விட்டுப் பிரிவதாக நிச்சயித்தான். புனிதவதியாரை விட்டுப் பிரிவதே கடமையென்றெண்ணிய பரமதத்தன் வேறு தேசங்களுக்குச் சென்று பண்டமாற்றி அளவற்ற ஐச்வரியத்தையும் கீர்த்தியையும் அடைந்து, அங்கேயே தங்கி அவ்வூரில் உத்தம குலத்திலுதித்த ஓர் கன்னிகையை மணந்து இல்லறம் நடத்திவந்தான். தெய்வமெனக் கருதிப் பயந்து புனிதவதியாரை விட்டு அகன்ற செய்தி ஒருவருக்கும் தெரியாமல் அநேக வருஷங்கள் சென்றன.

காலக்கிரமத்தில் சகல லக்ஷணங்களும் ஒருங்கே பொருந்திய ஓர் பெண் மகவைப் பரமதத்தன் பெற்றனன். தாம் தெய்வமெனக்கருதிவரும் கல்வியிற் கலைமாதிற்கும், அறநெறியில் அருந்ததிக்கும் ஒப்பான புண்ணியவதியான புனிதவதியாரின் திருநாமத்தையே தன் புத்திரிக்கு நாமகரணஞ் செய்தான்.

[தொடரும்.]



# இலங்கைக்கூலிகளின் கஷ்டமும், இந்தியர்வின் நஷ்டமும்

(புள்ளமங்கலம் ஸ்ரீமான். வெ. ருகவய்யர்.)

(76-வது பக்கத் தொடர்ச்சி)

இம்மாதிரியாக நம் தமிழ்மக்கள் வெளிநாடுகளில் படும் கஷ்டங்களை நிவர்த்திக்க நம்மில் ஒவ்வொருவரும் முன்வரல் வேண்டும். நம் தென்னாட்டிலுள்ளோர்களில் 'ஜஸ்டிஸ் கக்ஷி' யார் பிராமணரல்லாதார்க்கு ஏதேதோ நன்மை செய்வதாகச் சொல்லிக் கொண்டிருந்தவர்கள் வெளிநாடுகளில் கஷ்டப்படும் லக்ஷக்கணக்கான ஏழை மக்களைப்பற்றி ஒருவார்த்தையும் பேசாமல் இருந்துவிட்டார்கள். ஜஸ்டிஸ் கக்ஷி நம் நாட்டில் நிலைத்திருந்தால் ஒருக்கால் யோசிப்பார்கள் போலும். நம் தென்னாட்டில் சாகுபடி செய்யக்கூடிய ஆயிரக் கணக்கான ஏகர் நிலங்கள் தொழிலாளர்கள் இல்லாமல் சாகுபடி செய்யாது தரிசாக கிடக்கின்றது. இம்மாதிரி, தொழிலாளிகள் வெளிநாடுகளுக்குப் போய்விட்டால். நம்நாட்டில் தரிசு நிலங்கள் வரவர அதிகரித்துக்கொண்டே தானிருக்கும். இதைப் பரிகரிக்க இரண்டு வழிதான் உளது என்பது. எனது அபிப்பிராயம். முதலாவதாக நம் அரசாங்கத்தார் நம் நாட்டிலுள்ள ஏழை மக்களை வெளிநாட்டிற்குச் செல்லவொட்டாதபடி தடுக்கவேண்டும். இம்மாதிரி அரசாங்கத்தார் செய்யமாட்டார்களென்பது நிச்சயம். அரசாங்கத்திற்கு அம்மாதிரி ஒருசட்டம் செய்ய எண்ணமிருக்குமானால் வெளி நாடுகளில் நம்மக்கள் படும் அவஸ்தையைக்கண்டு மௌனம் சாதிப்பார்களா? ஆதலால் அரசாங்கத்தை எதிர்பார்ப்பதில் பிரயோசனமில்லை. இரண்டாவதாக நம் மிராசுதார்களே இக்கஷ்ட நஷ்டநிலைமையைப் பரிகரிக்கலாமென்பது என் தாழ்ந்த எண்ணம். நம் நிலச்சுவான்தார்களில் பலர் கிராமவாழ்க்கையை விட்டு நகர வாழ்க்கையை அடைந்து சுகமே காலம் கழிப்பதுபோல நம் ஏழைத்தொழிலாளிகளும் வெளிநாடுகளுக்குக் கப்பலேறிவிட்டார்கள். நம் மிராசுதார்கள் நகரங்களில் உலவியபோதிலும் அவர்களின் காரியஸ்தர்கள் செய்யும் கொடுமையால் கிராமங்களிலுள்ள தொழிலாளர்கள் (பண்ணையாள்கள்) சொல்லிக் கொள்ளாமலே கப்பலேறிவிடுகிறார்கள். மேல் கண்டபடி நடந்து வருவதால் மிராசுதார்களும் தொழிலாளரும் கஷ்டப்படுகின்றார்கள். மிராசுதார்களுக்கு வேலை செய்ய ஆள்களில்லாமல் ஆற்றில் ஜலம் வந்த ஒரு மாதத்திற்குப் பிறகு அம்மாப்பேட்டை, முத்துப்பேட்டை முதலியவிடங்களுக்குப் போய் கூலியாள் 1க்கு எச்சிலவும் மிராசுதார் கொடுத்து தினம் 1-க்கு 12 அணா வீதம் கொடுத்து ஆள்களை அழைத்துவந்து சாகுபடி செய்கிறார்கள். இம்மாதிரியாக சிலவு செய்து சாகுபடி செய்தபிறகு ஜலம்பாய்ச்சவும், களைபிடுங்கவும் ஆளில்லாமல் கஷ்டப் படுகிறார்கள். தண்டத்திற்கு சாகுபடிசெய்துவிட்டு ஏராளமாக விளைவில்லையே என்று ஏங்குகிறார்கள். இம்மாதிரியாக நிகழ்வதினால் நம்மிராசுதார்கள் நஷ்டமடைவதோடு கூட தொழிலாளர்களும் கஷ்டப்படுகின்றார்கள். விளைவில்லாமல் நம் நாட்டில் ஆங்காங்கு பஞ்சம் தலைகாட்டிக்கொண்டேயிருக்கிறது இப்பாழும் பஞ்சத்தினால் அனேக ஆயிரம் ஜனங்கள் மரணமடைகின்றனர். இம்மாதிரியாக கூலியாட்கள் நம் நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்குப் போய்க் கொண்டிருந்தால் இன்னும் 10 வருஷத்துக்குள் நம் தென்னிந்தியா முழுமையும் தரிசாகிவிடும் என்பதில் சந்தேகமில்லை. ஆதலால் சகோதரர்களே, நம் கூலியாட்களைப் பக்ஷமாய் நடத்துங்கள். அவர்களுக்குக் கல்வியைக் கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்யுங்கள். தெய்வபக்தி முதலிய சன்மார்க்கங்களைப் போதிக்க வகை தேடுங்கள் வெளிநாடுகளில் நம் மக்கள் படும் கஷ்டத்தை எடுத்துரைத்து வெளிநாடுகளுக்குப் போகாமலிருக்கும்படி பிரசாரம் செய்யுங்கள். நாம் இம்மாதிரியான கிரியைகளினால் நம்மக்களை வெளிநாடுகளுக்குச் செல்லவொட்டாமல் தடுப்பதோடு நம் தேச விளைபொருள்களையும் அதிகப் படுத்தலாமென்பதை ஒவ்வொருவரும் தெரிந்து கொள்ளவேண்டும்.

## பாங்குகளின் முறையும், அவைகளின் உபயோகமும்.

(ஒரு பாங்க் காவுியர் எழுதுகிறார்.)

(92வது பக்கம் தொடர்ச்சி)

செக்குத் தொகையை இன்னாருக்காவது அல்லது ஷே செக்கை கொண்டு வந்தவருக்காவது இன்ன தொகையைக் கொடு என்று எழுதப்பட்டிருக்கும் செக்குகளுக்கு 'பேரர்' (bearer) செக் என்று சொல்லப்படும். இன்னாருக்காவது அல்லது அவருடைய உத்திரவு பெற்றவருக்காவது இன்ன தொகையைக்கொடு என்று எழுதப்பட்ட செக்குகளுக்கு 'ஆர்டர்' (order) செக் என்று சொல்லப்படும்.

'பேரர்' செக்குகளுக்கு ஷே செக்கின் தொகை யாருக்குக்கொடுக்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறதோ அவருடைய கையெழுத் தில்லாமலே பாங்கர்கள் செக்குத் தொகையைக் கொடுத்துவிடலாம். ஆனால் 'ஆர்டர்' செக்குகளுக்கு யாருக்குப் பணம் கொடுக்கும்படி செக்கில் சொல்லியிருக்கிறதோ அவருடைய கையொப்பம் அவசியம் வேண்டும். 'பேரர்' செக்காயினும் 'ஆர்டர்' செக்காயினும் யார் செக்கைக் கொண்டுவந்து பாங்கரிடம் தொகை வாங்குவதற்குக் கொடுக்கிறார்களோ அவருடைய கையெழுத்து பாங்கர் வாங்கிக்கொண்டு தான் தொகை கொடுப்பார்கள். செக்கின் பணம் வாங்குபவரோ, அல்லது யார்பேரால் செக்கு எழுதப்பட்டிருக்கிறதோ (அதாவது யாருக்குக் கொடு என்று செக்கில் எழுதியிருக்கிறதோ) அவர்கள் கையெழுத்து செய்திருக்கிறதானது செக்குக்குப் பின்புறத்தில் தான் செய்யவேண்டும். செக்குக்குப் பின்புறத்தில் கையெழுத்துச் செய்வதற்கு 'எண்டார்சுமெண்டு' (endorsement) என்று சொல்லப்படும். இந்த எண்டார்சுமெண்டு என்று இருவகைப்படும். பின்புறத்தில் கையொப்பம் மாத்திரம் செய்துவிட்டால் 'பிளாங்' எண்டார்சுமெண்டு என்று சொல்வார்கள், செக்குக்குப்பின் புறத்தில் ஷே செக்கில் கண்ட தொகையை இன்னாருக்காவது அல்லது அவர் உத்தரவுக்காவது கொடு என்று எழுதியிருந்தால் அதற்கு 'ஸ்பெஷல் எண்டார்சுமெண்டு' என்று சொல்லப்படும்.

பாங்கில் நடைமுதல் கணக்கு வைத்திருப்போர் யாருக்காவது பணம் கொடுக்க வேண்டுமானால் அவருக்குக் கொடுக்கவேண்டிய தொகைக்கு செக் ஒன்று எழுதிக் கொடுத்துவிடலாம். அப்படி வாங்கிய செக்கை எண்டார்சுமெண்டு செய்து அவன் பிறருக்குக் கொடுக்கவேண்டிய தொகைக்காகக் கொடுத்துவிடலாம். இம்மாதிரியான செக்குகள் பல கைகள் மாறிக் கடைசியாக பணம் பெறுவதற்குப் பாங்கில் கொண்டு கொடுக்கப்படும். கொடுத்த பணத்திற்கு இந்த செக் ஓர் ஆதாரமாக மேற்கூறியவாறு இருக்கிறது. பாங்கில் செக்கில் கண்ட தொகையைவிட அந்தக் கணக்கில் குறைந்த பணம் இருந்தாலொழிய செக்கு தொகை கொடுபடாமல் இருக்கிறது. எவ்வளவு தொகை செக்கில் கண்டிருக்கிறதோ அதற்குக் குறைந்த தொகை செக் கொண்டுபோய் கொடுப்பவர் போதுமென்றாலும் அந்தத்தொகை கொடுபடமாட்டா கணக்கில் குறைந்த தொகை இருந்து செக் தொகை அதிகப்பட்டால் அந்தச் செக்கை பாங்கர்கள் திருப்பியனுப்பிவிடுவார்கள். பாங்கர்கள் செக்குக்குப் பணம் கொடுக்காமல் திருப்பியனுப்பும்போது, 'எழுதினவரைக் கேட்டுக் கொள்ளவும்' (Refer to drawer) என்று எழுதித் திருப்பிக் கொடுப்பார்கள். அப்படித் திருப்பிக் கொடுத்தால், செக் எழுதிக்கொடுத்தவர்கள் கணக்கில் தொகை இல்லைபோலும் என்று ஊகித்துக்கொண்டு செக் கொண்டுவந்தவர் திரும்பிப் போய்விட வேண்டியது தான். ஆனால் கணக்கில் இருக்கும் தொகையைவிட அதிகமான தொகைக்கு செக் எழுதி பாங்கர்களால் அந்த செக்திருப்பப்பட்டு விட்டால் டிபாசிட்டரின் கௌரவம் கெட்டுப் போய்விடும். அம்மாதிரி நேர்ந்தால்,



# ராணா பிரதாபசிம்மன்.

அல்லது

## "ரஜபுத்திர தேசபக்தி."

(ஸ்ரீமான் மகாலிங்க சர்மா சிறைவாசத்தில் எழுதியது.)

(All Rights Reserved.)

(92-வது பக்கம் தொடர்ச்சி:)

களைந்து மறுபடியும் சேர்த்துக் கட்டப்படாமல் அவிழ்ந்து முதுகின்மீது புரண்டுகொண்டிருந்தது. அவனுடைய வஸ்திரங்கள் கூரிய கொம்புகளால் கிழிக்கப்பட்டு அலங்கோலமாய் தொங்கிக்கொண்டிருந்தன. ஈரத்தினால் நனைந்த அவன் உடைகள், ரத்தத்தினால் சிவப்பேறி காஷாய வர்ணமடைந்தன. நெடு நேரமாக ஆகாரமின்றி அலைந்தபடியாலும், காட்டில் வழி தெரியாது இடர்ப்பட்டபடியாலும், உடல் சோர்ந்து, பலம் குன்றி, கால்கள் தள்ளாடி, நடைமெலிந்து, ஆங்காங்கு சிறிது உட்கார்ந்து மறுபடி எழுந்து ஒருவாறு வேகமாக நடந்துகொண்டிருந்தான். அவனுடைய முகம் துக்கத்தினால் வெளுத்துப்போய் இருந்தது. கண்களில் இருந்து நீர் ஓயாமல் வடிந்ததினால் அவை ஒளி இழந்து மங்கிப்போய் இருந்தன.

இத்தகைய கோலத்துடன் சென்றுகொண்டிருந்தான் அவ்வாலிபன். சிறிது தூரம் சென்றவுடன், ஏதோ ஒரு பெரிய வெளிச்சம் புலப்பட்டது. நடுக்காட்டில் வெளிச்சம் தோன்றியதற்கு, வியந்தவனாய் அத்திசை நோக்கிச் சென்றான். அவ்விடத்தே மூங்கில்கள் நெருங்கிவளர்ந்து ஒன்றோடொன்று உராய்ந்து நெருப்புப் பிடித்து, கோரமான தீயாக எரிந்துகொண்டிருந்தது. பார்ப்பதற்கு சிறிது பயங்கரமாக இருந்த போதிலும், சுற்றியிருந்த கொடிய இருளைச் சிறிது ஓட்டியதால், கொஞ்சதூரம் வரையில் அதன் வெளிச்சம் வியாபித்திருந்தது. அவ்வெளிச்சத்தையே தனக்கு ஓர் உதவியாகக்கொண்டு வழி நடந்தான் இளையோன்.

தான் வழிதப்பி நெடுந்தூரம் திரும்பிவிட்டதையும், நேரே செல்லவேண்டிய வழி வேறே இருப்பதையும் அறிந்தான். உடனே அவ்வழியைப் பிடித்துக் கொண்டு நடந்தான்.

அது ஒரு ஒற்றையடிப்பாதை. அதில் நடந்து சென்றுகொண்டிருக்கும்போது, நடுவழியில் கொடிய நாகமொன்று சீறிக்கொண்டு குறுக்கே சென்றது. எல்லாவற்றையும் கடந்து கடைசியில் காட்டை நீங்கி மைதானத்தை அடைந்தான். அங்கு சிறிது தூரத்தில் கோவில் இருப்பதைக் கண்டான். கண்டவுடன் உளமகிழ்ந்து தாயினிடத்து அன்பினால் விரைந்து செல்லும் கன்றைப்போல வேகமாகப் பாய்ந்து பாய்ந்து சென்றான்.

ஆலயம் வெகு அழகாக அங்கு அமைக்கப்பட்டிருந்தது. சுற்றிலும் அழகிய மதிலும் அதற்குப் பக்கத்தில் 50 கஜ அகலத்துக்கு சுத்தமான பளிங்குக் கற்களினால் இயற்றப்பட்ட வெண்முற்றமும் இருந்தது. கிழக்குப் பிரகாரத்தின் நடுவில் உயர்ந்த கோபுரம் ஸ்வர்ணகலசங்களுடன் விளங்கியது. கோவிலுக்குச் சிறிது தூரத்தில் ஓர் சிறிய வாய்க்கால் ஓடிக்கொண்டிருந்தது. தண்ணீர் சுத்தமானதாக இருப்பினும் காளமேகம்போல கன்னங்கரேலென்று இருந்தது. அந்நீரோடைக்குச்சென்று தன் வஸ்திரங்களை மறுபடி களைந்துப்பிழிந்து கட்டிக்கொண்டு உடல்குளித்து ஆலயத்திற்குள் புகுந்தான்.

தோரணவாசலைத் தாண்டிய சிறிது தூரத்தில், முதல் வாசற்படி இருந்தது. அவ்வாசற்படிக்கு எதிரே சுமார் 10 கஜ தூரத்தில் மெழுகெண்ணெய் தடவப்பெற்ற உயர்ந்த ஸ்தம்பமொன்று வர்ணச் சிலையுடன் நின்றுகொண்டிருந்தது. வாயிற்படியின் இருபக்கத்திலும், இரண்டு உயரமான சிலைகள் உருவின கத்தியுடன் நிறுத்தப்பட்டிருந்தன. அவ்வாயிலைக் கடந்து உள்ளே சென்றால் அது ஒரு மண்டபமாக இருந்தது. மூன்று

---

டிபாசிட்டர்கள் நாணயமற்றவர்களாகப் போய்விடுவார்கள். அவர்கள் செக்குத் திரும்பி வந்த விஷயம் பிறருக்குத் தெரிந்தால் அவருக்குள்ள மதிப்பு கெட்டுப்போய்விடும். அதனால் பலவித மான நிர்ப்பந்தங்கள் ஏற்படும். ஆகையால் செக்கோ எழுதி பிறரிடம் கொடுக்கும்போது தான் எழுதும் தொகைக்கு மேற்பட்ட தொகை பாங்கில் இருக்கிறதாவென்று பார்த்துக் கொண்டுதான் செக் எழுதவேண்டும். (தொடரும்.)

பக்கங்களும் சுவர்களில் நல்ல சிவப்பு நிறத்தில் சித்திரங்கள் எழுதப்பட்டிருந்தன. அவை தேவாசுர யுத்தங்களையும், தேவியின் யுத்தகோலங்களையும், அசுர ஸம்ஹாரங்களையும் விளக்கக்கூடிய சித்திரங்களாகவே யிருந்தன. வடக்கு சுவற்றின் பக்கத்தில் ஒரு நீண்டபலகை போடப்பட்டு, அதன்மீது பூஜைக்குவேண்டிய சாமான்கள், அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

மண்டபத்தைத் தாண்டி இன்னும் உள்ளே சென்றால், இரண்டாவது வாசலைக் கடக்கவேண்டும். அதற்குள்தான் அம்பிகையின் சிலை நின்றுகொண்டிருக்கிறது. அம்பிகையின் சிலைக்கு முன்னால் 3 கஜ தூரத்தில் ஓர் சதுரமான குழி இருந்தது. அதில் கட்டைகள் போடப்பட்டு புகைந்து கொண்டிருந்தது. பக்கத்திலுள்ள சுவற்றில் ஆணி அடிக்கப்பட்டு அதில் சாம்பிராணி மூட்டை ஒன்று தொங்கிக் கொண்டிருந்தது. அழகிய பொற்பாவைகள் கையில் விளக்குகள் ஏந்தி நின்றன. இரண்டொன்றில் மாத்திரம் நெய்போடப்பட்டு, ஒற்றைத்திரியுடன் எரிந்து மங்கலாய் வெளிச்சம் கொடுத்துக் கொண்டிருந்தன. கற்பூரக் குழிக்கும் அம்பிகைக்கும் நடுவில் பலிபீடமிருந்தது. பலி பீடத்தைச் சுற்றிலும் முகடு எடுக்கப்பட்டு உள்ளே சிறிது பள்ளமாக வைக்கப்பட்டிருந்தது அம்பிகையின் சிலை வெகு அற்புதமாய் அமைக்கப்பட்டிருந்தது.

விளங்குகின்ற பத்துத் திருக்கைகளுடனும், ஒவ்வொரு கையிலும் விதவிதமான கத்தி.வாள், வேல், சக்கரம் பாசம் தோமரம் பிண்டிமுதலிய ஆயுதங்களுடனும், விளங்கியது அந்தவிக்கிரகம். விக்கிரகத்துக்குமுன்னால் கிரமமாக சேதிக்கப்பட்டு, ரத்தவெள்ளத்தில் மூழ்கி, இருக்கும்பாவனையாக மகிஷாசுரனது உருவம்பிரதிஷ்டிக்கப்பட்டிருந்தது. அவனுடைய அறுபட்டகழுத்தின் வழியாக வெளிப்பட்ட ரத்தம் பலிபீடத்தைச் சுற்றி தேங்கி இருப்பதுபோல் காணப்பட்டது. சரிந்து வீழ்ந்த கூந்தலுடனும், குவளைமலர்மாலையுடனும், அன்னையின் உருவம் விளங்கியது. அழகிய ஸ்தலங்களாலும், பலியேற்றப்பட்ட ரத்தத்தினாலும் அபிஷேகம் செய்யப்பட்ட அவ்வுருவம், அந்தச் சிறிய விளக்கு வெளிச்சத்தில் பளிச்சு, பளிச்சென்று மின்னியது. நெற்றியில் விசாலமாகக் குங்குமத்தினால் பட்டை தீட்டப்பெற்றிருந்தது. சிரத்தின்மீது உயர்ந்த அழகியமகுடம் ஒன்று பொருத்தப்பட்டிருந்தது. கழுத்தில் நீண்ட மண்டை ஓடுகளைக் கோர்த்து, ஓர் மாலையாகப்போடப்பட்டிருந்தது. அம்மாலையுடன் விளங்கிய தோற்றம் பயத்தினால், மயிர்க்கூச்செடுக்கும்படி இருந்தது. வாய் சிவந்து அகலமாக கோபத்தினால் 'ஹா' என்று விரிக்கப்பட்டதுபோல் இருந்தது. கண்கள் விசாலமாக அமைக்கப்பட்டு, உயிர் பெற்ற விழிகள்போல கோரமாக ஆவேசத்தைக் கக்குவதுபோல இருந்தன. ஓர் கையில் தாங்கிய சக்கரமும், சுழல்கிற பாவனையாய் அமைக்கப்பட்டிருந்தது. மார்பில் மாணிக்கம், ஒன்று செக்கச்செவேல் என்று கௌஸ்துபம்போல் ஒளிவிட்டுத் துலங்கி நின்றது. மாதாவின் பாதத்தண்டையில் அவ்வம்மையின் வாகனமாகிய சிம்மம், கோடையிடி முழக்கம்போல காலைக் கீழே ஊன்றி கர்ச்சனை செய்யும் பாவனையாய் நிறுத்தப்பட்டிருந்தது அம்பிகையின் ஓர் பாதம் நிலத்தில் ஊன்றி மற்றொன்று சிறிது உயரத் தூக்கி ரத்தக்களிப்பினால் வெறிகொண்டு, ஆவேச மேலிட்டு ஆனந்தக் கூத்தாடுகிற பாவனையாக இருந்தது. கைகளில் நீண்ட கத்தி முதலிய ஆயுதங்கள் பயங்கரமாகப் பிரகாசித்துக் கொண்டிருந்தன அசுரனுடைய உடலில் பாய்ந்து வீழ்த்திய ரத்தக்கறையுடன், அடிவரையில் சிவப்பேறி, நிணக் கறையுடன் ஓர் கையில் கத்தி இருந்தது. மற்றொரு கையில் அசுரனுடைய குடலை அப்படியே பிடுங்கி, ரத்தம் சொட்டச் சொட்ட ஓர் மாலைபோல் வளைத்து அம்பிகையின் கழுத்தினுக்குச் சேர்ப்பிப்பதுபோல் அமைக்கப்பட்டிருந்தது மாதாவின் சிலைக்கு இரண்டு பக்கத்திலும், பாதவரிசைக்கு நேராக, கந்தருவர், கின்னரர், கிம்புருவர், யக்ஷர் முதலிய தேவர்களும், தொண்டர்களும் தத்தம் கைகளை சிரமேல் குவித்து கண்ணீர் சோர பக்தியுடன் அம்மையைப்போற்றுவதுபோல் விக்கிரகங்கள் பிரதிஷ்டிக்கப்பட்டிருந்தன. ரத்தப் பிரியையான தேவியின்பொருட்டு அவள் உள்ளம் களிக்கும்படி அன்றாடம் கொடுக்கப்படுகிற ரத்தபலியினால் தரை முழுவதும் சிவப்பேறி யிருந்தது. எங்கும் ரத்தவாசனையும், சாம்பிராணிப் புகையுமாக இருந்தது. பகைவர்களுடைய காற்றும் உள்ளே நுழையும்பக்ஷத்தில் தேவிக்கு உண்டாகும் கோபத்திற்கு அளவில்லைபோலும் அவளுடைய திருவிழிகளின் தோற்றமும், வாளினது சக்தியும், உருவத்தின் பயங்கரமும், எத்தகைய பகைவனையும் குலத்துடன் சுட்டெரித்துவிடக் கூடியனவாகத் தோன்றியது

வாசற்படிகள் ஒவ்வொன்றையும் தாண்டி அம்பிகைக்குச் சமீபத்தில் வந்து நின்றான் பிரதாபன். கோபுரத்தை மங்கிய இருளில் கண்ட மாத்திரத்திலேயே உடல் புளகித்து மெய்மறந்த இளவலாகிய பிரதாபன், அம்மணியின் திருச்சன்னிதானத்தில், நேருக்குநேராய் நின்ற காலத்து, அவன் உளம் கரைந்து நின்றதாகக் கூறவும் வேண்டுமோ? தன்னையும் மறந்தான்.

(தொடரும்.)



ஸ்ரீராமஜயம்.

## அபிமானிகளே!

ஸ்ரீ காசி அவதூத ஸ்வாமிகளின் பிரிய சிஷ்யர், ஆயுர்வேதாதி சர்வசாஸ்திர ராஜாங்கபண்டித பரம்பரை பிருஹ்மஸ்ரீ ராமஸ்வாமிசர்மா அவர்கள் முன்னிலையில் எமது பரம்பரை அனுபோகவைத்திய முறைகளாலும், கெஜவைத்தியர் யூனானி சித்தவைத்திய ஆயுர்வேத டாக்டர் கோ. திருவேங்கட நாயுடுகாரு, ஆயுர்வேத தேர்ச்சியுடைய டி. எஸ். நாராயணய்யர் இவர்களாலும் பிரசித்த மூலிகைகளைக் கொண்டும் தற்காலத்திற்கேற்கவும் குடும்பத்தியம் ஒன்றிருக்க ஒன்று செய்தல், பத்தியம் பிசகில் கெடுதல்செய்தல், குமட்டல், அருவருப்புகள் இல்லாததோடு தீவிரமான சுகமும் மேல் பலனும் அடையக்கூடியதாய் சித்தப்படுத்தும் பற்பல நீண்டகால அனுபவ ஒப்பற்ற ஔஷதங்கள் வி. பி. மூலமாயும்நேரில் கிரய ஜாபிதாவில் கண்ட விலைக்கும் கொடுத்து வருகிறோம்.

நோய் விலகி சரீரசுகம் பெறக்கோரும் நண்பர்கள் நமது ஔஷதசாலைக்கு வாருங்கள். தீவிரமாகவும் திருப்தியாகவும் அனுகூலம் பெறும் வகையில் தாராதரமறிந்தும் தெய்வபல நம்பிக்கையுடனும், நாம் செய்யும் வைத்திய உதவியைப் பெற்று விசேஷ சுகத்தையும் சந்தோஷத்தையும் நிச்சயம் அடைவீர்கள் சந்தேகமில்லை.

தேவையிருந்தால் நமது டாக்டரவர்களை சவுகரியம்போல் அழைத்துப்போய் கஷ்டமுள்ள வியாதியஸ்தர்களை நேரில் பார்த்து சிகிச்சை செய்விக்க வசதிகளுண்டு.

புத்திரப் பேறில்லாமை, குன்மம், மூலம், கிராணி, மகோதரம், குஷ்டம், தாதுஹீனம் முதலியதும் நரம்புச்சூலை. கிமிர்வாதம், மேகம், க்ஷயம், கிரந்தி, முடக்குச்சூலை, ஆராத ரணம், பயித்தியம், ஆண் பெண் மலடு, முதலியவைகளால் வருந்தியவர்களேயன்றி பல டாக்டர்களாலும் கூட தீராததெனக் கைவிடப்பட்ட நீண்டகால ரோகஸ்தர்களும் நமது மகா ஔஷதங்களாலும் சமயோசித மணிமந்த்ர நூதன சிகிச்சைகளாலும், அநேகம்பேர்கள் பூரண சுகமடைந்து இருக்கிறார்கள்.

சுகம்பெற்று அதிசயிக்கத்தக்கதும்

## இரண்டு ரக்ஷைகள்:

—(1)—

சிந்தாமணி ஸ்ரீ சந்த்ர ரக்ஷை.

ஸ்திரீ, புருஷர், குழந்தைகளுக் குண்டாகிற பலவகை நோய்கள் சூன்யாதிசேஷ்டைகள், குடும்பம், வியாபாரம், தொழில், உத்தியோகம் முதலியதுகளில் ஏற்படுகிற தாறுமாறுகளைப் போக்கி காரிய சித்தி, சுக செல்வ நலங்களை அடைவதற்கு இதை அணிந்தால் எல்லா நன்மைகளும் தவறாமல் கிடைக்குமென்பது நிச்சயம்.

நரம்பைப் பற்றிய வலி, குத்தல் முதலிய யாவும், துற்கினவுகள், சொற்பன ஸ்கலிதம், மனோவியாதி உடம்பு, கைகால் எரிவுபோன்ற அநேக வியாதிகளுக்கு தீவிரமான அனுகூலம் கிடைக்கும். வலிப்பு, காசம் பயித்தியம் மூர்ச்சைபோன்ற பலவகைக் கொடிய ரோகங்களுக்கும்கூட எப்படியும் குணம் தராமல் போகாது.

பெண்கள் சூதக சம்பந்தமான ஒழுங்கீனங்களும் அதனால் கெர்ப்பம் தங்காமை தலை சுழற்றல் பிரமைபாதி பேய்க்கோளாறுகளும், தாமதமின்றி நீங்கும். நீடித்த கணைச்சூடு, ஜுரங்கள், மாந்தங்கள், தோஷம், சோகை முதலிய எவ்வித நோய்களாலாவது தேகம் வற்றிப்போகிற குழந்தைகள் சிறுவர்களுக்கு எல்லா நோய்களையும் போக்கி செழிக்கச் செய்வதில் சந்தேகமேயில்லை.

மிருகங்களுக்கு கோமாரி, படுவன், வெக்கை தொற்றுவியாதிகள் முதலிய பல நோய்களையும், போக்குவதோடு அணுகாமலும் தடுக்கும்.

சிந்தாமணி கைவல்ய ரக்ஷை.

முன் ரக்ஷையின் பல அரிய குணங்களுடனும் கூட நீடித்து பல குடும்பங்களில் நேர்ந்து வருகிற மனஸ்தாபம், கலவரம், கட்டுப்பாடின்மை

விசுவாசமின்மை போன்ற பலதால் துன்பப்படுகிற அநேகருக்கும், பல துன்மார்க்கங்களில் பிரவேசித்து அலைகிற ஒழுக்கம் மறந்தவளை மணந்துள்ள சகோதரிகளுக்கும் அடக்க ஒழுக்கத் தாழ்மையை எண்ணாத இல்லாளையுடைய சகோதரர்களுக்கும் மந்த்ர சக்தியையும் கூட உடைய இந்த ரக்ஷையினால் தங்களுக்குள்ள பல துயரங்களும் நீங்கி ஒற்றுமை, சுகபோகநன்மை அடைவது நிச்சயம் என்று தைரியமாய்ச் சொல்லுவோம்.

உக்ரவேதனை நீக்கி உடனே சுகப்பிரசவமாகிற அருஞ்செயலையும் பூதப்ரேதாதி திடுக்கிட்டு நேர்ந்துவிடுகிற பல ஆபத்தான கஷ்டங்களையும் உயிர்த்துணையாகிய இதனால் சொஸ்தமடையும் விதம் நேரில் பார்த்தவர்களுக்கு எப்போதும் ஞாபகத்திலிருக்கும்.

கல்வித் தேர்ச்சியில் உயர்வதிலும் சட்டநுட்பங்களைக் காண்பதிலும் தீவிரமுடையோர்க்கு சூட்சும அறிவையும் மனசசாந்தியையும், இதமொழிகளை பிறரை ஏற்கச்செய்யவும் கவற்சியைப் பெறவும் கோருகிற பற்பல காரியநிர்வாகிகளுக்கு நிர்வாக ஆற்றலையும் தெம்பையும் நிச்சயம் அடைப்பச்செய்வதில் தடையில்லை.

அதிக அபிமானம் கொண்ட அன்பர்கள் ஒவ்வொருவருமே உபயோகித்தவர்க் கெல்லாம் சுகம் தரும் இந்த ரக்ஷையை அணிந்து சுக அபிவிருத்தியடையவேண்டியது அவசியமெனக் கோருவோம். நிம்மதியுடைய எல்லாக்குடும்பங்களிலும் அனேக வருஷகாலம் இயற்கையிலேயே உடைய தனது அரியசக்தி குறையாமல் எதிர்பாராத பற்பல ஆபத்துக்களைத் தடுக்கும் பெரும் செய்கையைப்பெற்ற இதை உபயோகித்து வரவேண்டியது அதிக முக்கியம்.

யாவரும் திரிகாலமுணரும் வல்லவர்களால் கண்டுபிடித்த எல்லாவகை ரக்ஷகளிலும் தெள்ளிப் பொருக்கிய நிகரற்ற இந்த கைவல்ய ரக்ஷையினால் விசேஷ சுகத்தையும் சந்தோஷத்தையும் நிச்சயம் அடைவீர்கள் என்று முழு நம்பிக்கையோடு சொல்லுகிறோம்.

பரிசோதித்துப் பாருங்கள்.

இதை பூஜையில் வைத்து ஆராதிக்கவும் தகுதியுடையது என அறியப்படும்.

நீடித்த வருஷங்களாய் அனேகம் பேர்களுக்கு இதைக்கொடுத்து நீடித்து ஆகவேண்டிய காரியங்கள் கைகூடாததினாலும் முடிவைப்பெறாத விவகாரங்களினாலும் பலவகை தேக உபாதிகளாலும் குடும்ப வியாகூலங்களாலும் வசப்பட்டு வாராத தனது சுகாதி செல்வங்களாலும் வெகுவாய் வருந்தினவர்கள்கூட கடைசியாக இதன் உபயோகத்தினால் பூரண அனுகூலம் அடைந்திருக்கிறவர்கள் அநேகர்.

தொன்றுதொட்டு சித்தபுருஷர்கள் கைக்கொண்டு வந்த இந்த பெரிய ரக்ஷையைப் பற்றி அநேகரால் நமக்கனுப்பியுள்ள அனுபவசாக்ஷிகள் பல.

நற்குணம் நிறைந்த சிந்தாமணி ஔஷதங்களை உபயோகித்து நோய் நீங்கி பூரண சுகம் பெற்ற அநேகரால் நமக்குக்கொடுத்துள்ள அரிய நற்சாக்ஷிகளனேகம்.

காலதாமதம் காரியமே ஆகாது.
இன்றே செய்யவும் வேண்டும்

விவேக பாஸ்கரன்,
ஆ. சி. கிருஷ்ணசாமி செட்டியார்,
சிந்தாமணி திராவியசாலை,
பேட்டைத்தெரு, கும்பகோணம்.

### சந்தா நேயர்களுக்கு விக்ஞாபனம்.

தயவுசெய்து சந்தா தொகையை உடனே மணியார்டர் செய்தனுப்பக்கோருகிறோம். அப்படி செய்யாதவர்களுக்கு அடுத்தசஞ்சிகை வி. பி-யில் அனுப்ப நேரிடும். அதனால் 3-அணா அதிக செலவேற்படுவதை கவனிக்க விரும்புகிறோம்.

பத்திராதிபர்.




## காயாரோகண வைத்தியசாலை, கும்பகோணம்.

(டாக்டர் V. P. சாமி அவர்களால் மிக்க திறமையுடன் நடத்தப் பெறுவது)

சித்தர்களுடைய உயர்ந்த வைத்திய முறைகளைப் பின்பற்றி பல நூற்றாண்டுகளாகக் கையாளப்படும் சிறந்த சுதேச வைத்தியசாலை. ஆராய்ச்சியும் அனுபவமும் கீர்த்தியும் வாய்ந்த அரியதோர் வைத்திய குடும்பத்தினரால் சிறப்புடன் பரிபாலிக்கப்பட்டு வருகிறது. ஏழைகளுக்குத் தருமவைத்தியம் செய்யப்படும். மாதந்தோறும் ஆயிரக்கணக்கானவர்கள் பிணி நீங்கி, வாயாரா வாழ்த்திச்செல்கின்றனர். மலபந்தம், அஜீரணம், ஜுரம், காசம் முதலிய நோய்களுக்கும்; குஷ்டம், குன்மம் முதலிய மகாரோகங்களுக்கும் ஆச்சரியப்படும்படி மிக்க சுலபமாகச் சிகிச்சை செய்து நிவர்த்திக்கப்படும்.

குழந்தைகளுக்கு ஏற்படும் கட்டி, காமாலை முதலிய கொடிய வியாதிகளை நிவர்த்தி செய்வதில் நமது வைத்தியசாலை அழியாப்புகழ் பெற்றிருக்கின்றது. ஏழைகளுடையவும், பிணியாளிகளுடையவும் நன்மையையே கருதி நடத்தப்படும் உயர்ந்த சுதேச வைத்திய ஸ்தாபனம் இதுவே. விபரங்களுக்கு எழுதவும்.

மானேஜர், காயாரோகண வைத்தியசாலை.
காமாக்ஷி ஜோசியர் தெரு, கும்பகோணம்.

கும்பகோணம் டவுன் ஹைஸ்கூல்
பிரதம ஸமஸ்கிருத பண்டிதர்
ஆர். சிவராம சாஸ்திரிகளால்
பிரசுரிக்கப்பட்ட

## ஸமஸ்கிருதபுஸ்தகங்கள்.

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீ ராமசரிதம் (ஸமஸ்கிருத வசனம்) | 0 | 7 | 0 |
| சாகுந்தலா சரிதம் ௸ | 0 | 4 | 0 |
| சாருதத்த சரிதம் ௸ கும்பகோணம் டவுன் ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டர் மகா-ா-ஸ்ரீ சுவாமிநாதய்யர் அவர்களுடைய முன்னுரையுடன் கூடியது | 0 | 7 | 0 |
| சரித்ர ரத்னாவளி | 0 | 10 | 0 |
| தர்மகல்பவல்லி (முதல் பாகம்) | 1 | 8 | 0 |
| சுக்ல யஜுர்வேதம் | 4 | 0 | 0 |
| ஸ்ரீமத் பாகவதத் தமிழ் வசனம் | 12 | 0 | 0 |
| தர்மகல்பவல்லி (2-வது பாகம்) டெம்மி 2 பாரம் கொண்டஸஞ்சிகையாக மாதந்தோறும் வெளிவரும். வருஷ சந்தா | 2 | 0 | 0 |

பண்டிட் ஆர். சிவராம சாஸ்திரி,
தலைமை ஸமஸ்கிருத பண்டிதர்,
டவுன் ஹைஸ்கூல் கும்பகோணம்.

## "தமிழர் போதினி"

யாழ்ப்பாணத்திலிருந்து மாதந்தோறும் வெளிவரும் அரிய பத்திரிகை.

இராஜீய, தேசிய விஷயங்கள் நன்றாய் எழுதப்பெறுவன. சுயராஜ்ய தாகமுடையோர் இதனை அவசியம் வாசிக்கவேண்டும். அடுத்த வருடம் மாதமிருமுறை வெளிவரும்.

வருடச்சந்தா ரூ. 3—0—0.
தமிழர் போதினி ஆபீஸ்.
யாழ்ப்பாணம்,
(இலங்கை.)

## ஸ்ரீ மஹாபாரதச் சுருக்கம்.

(ஆதிபர்வம்.)

வேதாந்த தீபிகை:—மற்ற பர்வங்களைவிட ஆதிபர்வத்தில் கிளைக்கதைகளதிகம். பாண்டவர்களின் சரித்ராரம்பத்துக்கு உபோத்காதமாகவே அநேக அத்யாயங்களிருக்கின்றன. இவற்றையெல்லாம் சுருக்கி ஒழுங்காக ஒன்று சேர்த்துக்கொண்டு வருவதில் ஐயரவர்கள் திறமை காட்டியிருக்கிறார்.

இதன் விலை அணா 12. தபாற்செலவு வேறு.
மானேஜர் :
சமஸ்கிருத பாடசாலை,
சேங்காலிபுரம், (தஞ்சை ஜில்லா.)

மொத்தமாகவும் வாங்கலாம். 12 காபிகள் வி. பி. சார்ஜுள்பட ரூ. 8—0—0. 6 காபிகள் வி. பி. சார்ஜுள்பட ரூ. 4—4—0.

நம் சகோதரர்களே! வியாபாரிகளே!
விளம்பரம்செய்வோர்களே!

## திராவிடன்

நம் தமிழ் நாட்டார்
முன்னேற்றத்திற்காகவே
வெளிவந்துலாவும்
தினசரிப் பத்திரிகை.

அரசர்முதல் சாமானிய விவசாயிவரை, செல்வவான் முதல் ஏழைவரை, சாதி, வகுப்பு பேதமின்றி யாவரும் வாசித்து வருவது நம் பத்திரிகையையே.

தமிழ்நாடு முழுவதும், தமிழ் நாட்டார் குடியேறியிருக்கும் வெளிநாடுகள்தோறும் பரவி வருகிறது.

விளம்பரம் செய்து வியாபாரத்தைப் பெருக்கிப் பணம் சம்பாதிக்க ஏற்ற பத்திரிகை இதுவே.

மானேஜர்:—
திராவிடன்'
போஸ்டு பாக்ஸ் நெ. 760,
எழும்பூர், மதருஸ்.

## "தெய்வ பக்தன்."

ஓர் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை

தமிழ் நாட்டில் தேவஸ்தானம் முதலிய தர்மஸ்தாபனங்கள் இவற்றால் நம்மவர் அடையவேண்டிய நன்மைகளையும் அவற்றில் அவர்களுக்குள்ள சம்பந்தங்களையும், பிற அறிவு வளர்ச்சிக்கும், செல்வ விருத்திக்கும் உற்ற செய்திகளைப்பற்றி பல அறிவாளிகள் எழுதிய வியாசங்கள் இதில் வெளிவரும். ஒவ்வோரு மதாபிமானி, தேசாபிமானிகளிடத்திலும் தவறுதிருக்கவேண்டிய ஒரு சிறந்த பத்திரிகையாகும்.

வருஷ சந்தா ரூ. 3.

மானேஜர், தெய்வபக்தன், கும்பகோணம்.

## "சந்திரா" பற்பொடி.

இந்தச் "சந்திரா" பற்பொடியின் குணம் பல்வலி, பல் அசைதல், நீர் கரைதல், பல்கூசுதல் முதலிய சகலதந்தரோகங்களையும் நிவர்த்திசெய்து பல்லைக் கெட்டிப்படுத்துவதில் நிகரற்றது. அநேக டாக்டர்களாலும் கனதனவான்களாலும் நற்சாக்ஷிப் பத்திரம் அளிக்கப்பட்டிருக்கிறது. இதன் குணம் ஒரு முறை வாங்கி அனுபவித்தால் தெரியும். ஒரு பலம் டப்பி 1க்கு விலை அணா 3. டஜன் 1க்கு விலை ரூ 2 வியாபாரிகளுக்குத் தக்க கமிஷன் கொடுக்கப்படும், மிகுந்த உயர்ந்த முறையில் சாஸ்திர முறைப்படி தயார் செய்யப்பட்டிருக்கிறது.

எல். ராமச்சந்திர ஐயர்,
நீலகண்ட கதர் ஸ்டோர்,
பெரியகடைத்தெரு, கும்பகோணம்.

## ஸ்ரீபாலானந்த பற்பொடி.

இது பல்வலி, பல் ஆடுதல், இரத்தம் வடிதல், பல் கூச்சம், பல் சொத்தை இவைகள் சௌக்கியமாகும். தவிர நீர் கத்தல், நீர் எரிச்சல், வெட்டை, புண், வயறுகடுப்பு, இரத்தக் கடுப்பு, மூலக்கடுப்பு இவைகளுக்கு ஆட்டுப்பால் அல்லது எருமைத்தயிரில் மேற்படி பற்பொடியைக் கலந்து சாப்பிட்டால் ஒரே வேளையில் அனுகூலப்படுத்தும்.

மூன்று மாதம் உபயோகப் படுத்தக்கூடிய டப்பி 1-க்கு விலை அணா 4.

அஷ்டகுல்ம
ஸர்வரோக நிவாரண யௌவனலேகியம்

குல்மம் முதலான சகல ரோகங்களையும் கண்டித்து சரீரத்தை பெலப்படுத்தி ஆரோக்கியத்தையும் சுகத்தையும் கொடுக்கக்கூடியது. பத்தியமில்லை. இதன் விலை சேர் 1-க்கு ரூ. 4.

நேத்திரானந்த தைலம்.

கண் எரிச்சல், கண்புகைச்சல், கண்மறைவு, மண்டைக்குத்தல், சொரிசிரங்கு இவைகள் சௌக்கியமாகும். கிரயம் சேர் 1-க்கு ரூ. 2.

குறிப்பு:—காசரோகம், குஷ்டம் முதலிய மகா வியாதிகள் நிவர்த்திபண்ணும் அருமையான மருந்துகள் கிடைக்கும். ஏழைகளுக்குத் தர்ம வைத்தியம். கமிஷன் ஏஜண்டுகள் தேவை.

V. பாலு அண்டு ஸன்ஸ்,
எலந்துறை, திருவிடமருதூர் போஸ்டு.



ஏஜண்டுகள் தேவை. நல்ல கமிஷன் உண்டு

## தத்துவ போதினி.

ஓர் சிறந்த மாதப்பத்திரிகை

யாவராலும் புகழப்பெற்றது. எங்கும் விராமிக்கப்பெற்றது. இப்பொழுது ஸ்ரீமத் வால்மீகி இராமாயணமும், இராஜமாணிக்கம், நீலாங்கனை என்ற துப்பறியும் நாவல்களும், திருக்குறளுரையும், சீர்காழி க்ஷேத்திரத்தின் மகிமையும், தத்துவவிஷயங்களும் எழுதப்படுகின்றது. ஸ்திரீகள் சிறுவர்களைக் குறித்த புத்திமதிகள், நல்லுரைகள், வர்ணாச்ரம தர்மத்தைக்குறித்த முக்கியமான விஷயங்களும் தக்க பெரியோர்களால் எழுதப்படுகின்றது. இவைகளுக்காக சில பக்கங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இந்தியா, பர்மா, சிலோனுக்குச் சந்தா ரூ. 1—0—0. (வெளி நாடுகளுக்கு ரூ. 1—4—0)

3000 பத்திரிகைகளுக்குமேல் அச்சிடப் படுவதால் விளம்பரம் செய்வதற்குத் தகுதியானது. விளம்பர விகிதமும் குறைக்கப்பட்டிருக்கிறது.

தத்துவபோதினி ஆபீஸ்.
328, தங்கசாலைத்தெரு, சென்னை.

## தேசீய ராஜீய
## சரித்திர நூல்கள்.

ஸ்ரீமான் எம். எஸ். சுப்பிரமணியஐயர் எழுதியவை.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ரஜபுத்திர வீரர் சரித்திரம் | 1 | 4 | 0 |
| 2. | ஆரிய சரித்திரம் | 1 | 0 | 0 |
| 3. | மகாத்மா காந்தி சரிதம் | 0 | 8 | 0 |
| 4. | ஒத்துழையாமை சரித்திரம் | 0 | 4 | 0 |
| 5. | இந்தியாவும் சுய ஆட்சியும் | 1 | 8 | 0 |
| 6. | ஐசுவரிய சக்கரம் | 0 | 8 | 0 |
| 7. | திருக்குறள் நீதிக்கதைகள் | 0 | 6 | 0 |

இவையும் இன்னும் பல அரிய புத்தகங்களும் கீழ்க்கண்ட இடத்தில் கிடைக்கும்:

மயில் வாகன் கம்பெனி,
புத்தக வியாபாரிகள்,
ஐயப்ப செட்டித்தெரு, மண்ணடி, மதறாஸ்.

## லோகமான்ய திலகர்.

பிறந்ததுமுதல் இறந்தது வரை முழு விவரத்துடன் ஸ்ரீயுத கிருஷ்ணசுவாமி சர்மா எழுதியது. சிதாககசியம், காந்தி-திலகர் சம்வாதம், திலகர் ராஜீயக் கொள்கை, விசாரணைகள், நித்திய வாழ்க்கை முதலிய பலவிஷயங்கள் 16 அத்தியாயங்களில் காணலாம்.

300 பக்கங்கள் கொண்டது விலை ரூ. 1—8—0.

## தேசாபிமானத்தையூட்டும் நூல்கள்,

ஸ்ரீயுத கிருஷ்ணஸ்வாமி சர்மா இயற்றியவை.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மகாத்மா காந்தியடிகள் | | | | | 1 | 8 | 0 |
| அலி சகோதரர்கள் | | | | | 1 | 0 | 0 |
| டால்ஸ்டாய் ருஷ்யஞானி | | | | | 0 | 4 | 0 |
| சிவாஜி மகாராஜா | | | | | 1 | 0 | 0 |
| இந்தியா இழந்த தனம் | | | | | 1 | 0 | 0 |
| இராஜரீக சாஸ்திரம் | | | | | 1 | 0 | 0 |
| இராஜராஜ சோழன் | | | | | 0 | 10 | 0 |
| அசோக சக்கரவர்த்தி | | | | | 0 | 8 | 0 |
| நெபோலியன் | 1 | 8 | 0 | பண்டிதநேரு | 0 | 2 | 0 |
| கும்பமகாராணு | 0 | 6 | 0 | ஆத்மசக்தி | 0 | 10 | 0 |

மானேஜர், கிராமானுகூலன், கும்பகோணம்.

தாதுபுஷ்டிக்குச் சிறந்த
ராஜவீரிய யுனானி
## மகாவித்துவாதி லேகியம்.

30 நாள் சாப்பிடக்கூடிய 1 சேர் டப்பி ரூ. 3.

பிரதிதினம் காலை மாலை சாப்பிட்டுவர நல்ல பசியைக்கொடுத்து, மலத்தை சுகமாய்க்கழித்து, இரத்தவிர்த்திசெய்து, நரம்புகளுக்கு முறுக்கேற்றி, ராஜக்கருவிகள்பலப்பட்டுதேகதிடம், தேஜஸ், முகவசீகரம் மனோற்சாகம் முதலியவை ஏற்பட்டு, சந்தானவிர்த்தியை யளிக்கும். சுருங்கச்சொல்லின் இழந்துபோன பலம் முழுவதும் திருப்பிக்கொடுக்கும். வேண்டுபவர் கியாட்லாக்கிற்கு எழுதவும்.

ஐ. ஷேக்ஹாலி சாகிப்,
நேடிவ் யுனானி டாக்டர்,
ஆயுர்வேதிக் யுனானி மெடிகல் ஹால்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

# A. N. காதர் அவுலியா பரிமளச்சாலை,

வலங்கைமான். (தஞ்சை ஜில்லா.)

—:(x):—

A. N. காதர் அவுலியா

## வீரிய விருத்தி சிட்டுக்குருவி லேகியம்,

24 நாள் சாப்பிடக்கூடிய 8 பலம் (1-சேர்) எடையுள்ள டப்பி 1க்கு விலை ரூ 2—12—0.

அறிவிற் சிறந்த ஆரிய சிரோன்மணிகளாகிய எனது சகோதரர்களே! அவசியம் கவனிக்க வேண்டியது ஒன்று.

கனவான்களே! ஜீவனுக்கு இரத்தமே பிரதானம். முக்கியமாக மனிதர்கள் நோயின்றி வாழ்வதற்கு, ஆயுள் விருத்தி, பெலம், காந்தி, ஊக்கம், காமம், வீரிய விருத்தி, ஆண்மை, சந்தான விருத்தி முதலியவை அடைவதற்கு அவ்விரத்தத்தினின்று உண்டாகும் சுக்கிலமே பிரதானம். ஆகையால் இச்சுக்கிலத்தைப்பற்றிய வியாதிகளை அறிந்திருப்பது பிரதானத்திலும் மிகப் பிரதானமே. ஏனெனில் இப்பிராணுதாரமாகிய இந்திரியத்தை உற்பத்தி செய்யக்கூடியதில் முக்கியமானவை வீரியவிர்த்தி சிட்டுக்குருவி லேகியம் ஒன்றே. இதையுண்டு உற்பத்தி செய்துகொள்ளாமல் ஆண்மையை முழுவதும் இழந்தவர்களனந்தம். ஆண்மைக்குறைவு பட்டிருப்பவர்களனந்தம். நாளுக்கு நாள் அதிக அளவாய் வீரியதத்துவம் நஷ்டமடைந்து வருபவர்களனந்தம். இன்னும் பலநோய்களடைந்து தளர்ந்து மெலிந்து துற்பலமடைந்து மனமுடைந்து சொல்லொணு வருத்தத்தோடு அகால மரணத்திற் குள்ளாகிறார்கள். இவ்வருமையான வீரியவிருத்தி சிட்டுக்குருவிலேகியத்தை யாதொரு பத்தியமன்னியில் உண்டுவர, கீழ்க்கண்ட வியாதிகளை ஆண்டவன் உதவியால் நிவர்த்தி செய்து, முன்னிருந்த பெலத்தைவிட பதின்மடங்கு பெலத்தையும். குறையாத ஆண்மை தத்துவ வீரியத்துடன் சுறுசுறுப்பையும், மனைவாழ்க்கையில் ஆயுள்பரியந்தம் அளவு கடந்த மாறாத இன்ப சுகத்தையும் உண்டுசெய்துக்கொண்டே வரும், தஞ்சைமாநகரை ஆண்டு வந்த சிவாஜீ மகாராஜா அவர்கள் கையாண்டுவந்த அரண்மனை வாகட முறைப்படி செய்து விற்றுவருகிறோமென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல யாவருக்கும் தெரிந்த விஷயம். இவ்வீரிய சிட்டுக்குருவி லேகியத்தில் ஆண் சிட்டுக்குருவியுடன் விலையுயர்ந்த அபூர்வ யுனானிசரக்கு 13, வித்து 33, பிசின்வகை 9, கடைச்சரக்கு 34, பால்வகை 7, பழ ரசவகை 7, மூலிகைச் சத்துவகை 9 புஷ்பவகை 10, அயகாந்தசெந்தூரம் 2, வெள்ளிரேக் 1 கற்கண்டு, தேன், நெய் 8, ஆக சரக்கு 128 உடன், செய்பாகம் கைபாகம் தவறாமல் வாய்க்கு மதுரமாகச் செய்திருக்கிறபடியால் இதன் சிறந்த குணங்களைக்கீழே காணலாம்.

### தீரும் வியாதிகளின் விபரம்.

உஷ்ணம், வெட்டைச்சூடு, வெட்டை வாய்வு, வெட்டையும்பிடிப்பு, கைகால் அசதி, சுஸ்தி, சோம்பல், பெலக்குறைவு, இடுப்புவலி, தாதுநஷ்டம், இந்திரியம் நீர்த்துப்போய் இருக்குதல், மனை வாழ்க்கையில் விருப்பமின்றி இருத்தல், மனைவியாருடன் சரச சல்லாப வார்த்தையாடுகையில நாதம் மனக்குத் தெரியாமல் ஸ்கலிதமாகுதல் மனைவாழ்க்கையில் சொற்பநேரத்தில் ஸ்கலிதமாகுதல், நோக்குமளவில் ஸ்கலிதமாகுதல், நித்திரையில் ஸ்கலிதமாகுதல், மனை வாழ்க்கைக் காலத்தில் ஆண்குறி பருத்து சொற்ப நேரத்துக்கெல்லாம் குறி தளர்ந்து இந்திரியம் வெளிப்படுதல், மனைவாழ்க்கையில் எண்ணமே இல்லாமலும், உக்கியில் காங்கை மீறி சம்போகக் குறைவு ஏற்பட்டு ஆண்குறி பருத்து சொற்ப நேரத்திற்கெல்லாம் குறி தளர்ந்து வலுவில்லாமற் சோர்வடைந்திருக்குதல், இந்திரிய இழிவு, ஆண்மலடு, மந்தம், கிழத்தனம், கோழைத்தனம் சொற்பன ஸ்கலிதம், துரிதஸ்கலிதம், ஆண்குறி மெலிவு, துவளல், ஆண்குறி சோர்வடைந்திருக்குதல், மனைவாழ்க்கையில் இருவரும் இன்பசுகமில்லாமல் சீக்கிரம் ஸ்கலிதமாகுதல், சொற்ப வாலிபகாலத்தில் முற்றிலும் மனைவாழ்க்கை எண்ணமே இல்லாமல் மலட்டுத்தன முடையவர்களும், வாலிப மூர்க்க காலத்தில் மிதமிஞ்சி பல விலைமாதர்களிடத்தில் செலவுசெய்து தனது காயகி மனைவாழ்க்கையில் பெலனற்று இருக்குதல், அகால மூப்பினால் சம்போகக்குறைவு ஏற்பட்டவர்களும், மிதமிஞ்சிய சம்போகத்தால் நீர்த்தாரை பெருத்து மனைவாழ்க்கையில்இன்பமற்றிருக்குதல், கவலை, ஊக்கம், அதிகப் பிரயாசை, நித்திரை பங்கம், இவைகளால் இரத்தம் கெட்டு உடல் வெளுத்துப் பெலஹீனமுடையவர்களும் அன்னதோஷம், பசிமந்தம் ஜீரணக்குறைவு, புளித்த ஏப்பம், வயர் உப்பிசம் இவை யாவையும் நீக்கி, இரத்த விருத்தியுடன் நரம்புகளில் முறுக்கேறி வீரிய விர்த்தியை உண்டு செய்துகொண்டே இந்திரியத்தை பனை கொங்கைப்போல் இருக்கினதை இளக்கியும், குறுகினதை நீளவும்செய்து பருத்து நீண்டு ஆண்மை தத்துவத்தையும், ஆயுள் பரியந்தம் மாறாத பூரண சக்தியையும், மனை வாழ்க்கையில் மனைவியின் ஆசையைப் பரிபூரணமாய் நிறைவேறும்படி செய்து கொண்டு வருவதுடன், நோயின்றி தேக பஷ்டி, முகவசீகரம், ஆரோக்கியம் முதலானவைகளை உண்டு செய்துக்கொண்டு வருவதுடன் ஆண்டவன் உதவியால் சந்தான புத்திர பாக்கியததை எளிதில் பெறவும் செய்யும். இந்த லேகியத்தை உபயோகப்படுத்திய உத்தமர்கள் இந்தச் சிறந்த குணங்களைச் சுகானந்த ஆனந்தத்துடன் புகழ்வார்களென்பது உண்மையான நிச்சயம். லேகியத்தை ஆண் பெண் யாவரும் சாப்பிடலாம்.

லேகியத்தைக் காலையில் ஒரு சுண்டைக்காய் அளவும் மாலையில் இரண்டு சுண்டைக்காய் அளவும் சாப்பிடவேண்டும். (பத்தியம் யாதொன்றுமில்லை.)

223465



## சுதந்திரன்.

பிரதி பானுவாரந்தோறும் வெளிவரும் ஓர் தமிழ்ப்பத்திரிகை.

சென்ற 7 வருஷகாலமாய் நம் நாட்டு முன்னேற்றத்திற்கு அடிப்படையான விவசாயம். கைத்தொழில் வியாபாரம் முதலிய செல்வவிருத்திக்கான விஷயங்களும், மனிதர்களுக்கும், கால்நடைகளுக்கும் அவசியமான சுகாதாரம், நோய் பரிகாரம், மதுவிலக்கு முதலிய வியாசங்களுடன் வெளிவந்து கொண்டிருந்த "வர்த்தக மித்திரன்" தத்காலப் போக்கை அனுசரித்து "சுதந்திரன்" என்னும் பெயருடன் 4 வருஷ காலமாக இராஜீய விஷயங்கள், மகாத்மா காந்தியவர்களின் உபதேசம், இந்தியா முன்னேற்ற மார்க்க விவரங்கள் முதலிய விஷயங்களுடன் வெளி வருகின்றது. சுயராஜ்யமடைய விரும்புவோர் யாவரும் இப்பத்திரிகையை வரவழைத்துப் படித்து சகோதர, சகோதரி யாவரும் சுயராஜ்யமடைந்து சுகஜீவிகளாகவேண்டும்.

வருஷசந்தா இந்தியாவிற்கு ரூ 6—0—0.

சுதந்திரன் ஆபீஸ்,
தஞ்சாவூர்.

## கற்பகம்.

—:(x):—

ஒரு செந்தமிழ் மாதச் சஞ்சிகை.

இதில் கல்வி, சாஸ்திரம், சுகாதாரம், கைத்தொழில், வேதாந்தம், இராஜாங்க ஜனங்க சீர்திருத்தங்கள், நூதன கற்பிதங்கள், மதவிஷயம், சிறுவர் சிறுமிகளுக்கான விஷயங்கள், உலக அற்புதம், வர்த்தமானம், விநோதக்கூற்று முதலான அரும் விஷயங்களுடன் வெளிவருகிறது.

வருஷ சந்தா உள் நாட்டிற்கு ரூ 1—0—0.
,, வெளி நாட்டிற்கு ,, 1—8—0.

மானேஜர்:— "கற்பகம்" புதுவை.

## சிற்றின்ப சாஸ்திரம்.

பிரசித்தி பெற்ற அருமையான இந்நூலில் ஸ்திரீ, புருஷர், இவ்வுலகில் அனுபவிக்க வேண்டிய சிற்றின்ப ரகசியங்கள், ஸ்திரீகளின் பருவப் பெயர்கள், புருஷர்களின் பருவப் பெயர்களும், மானிட இன்பங்களில் 55-ம் இதில் ததும்பிக் கிடக்கின்றன.

புத்தகம் 1-க்கு வி. பி. சார்ஜ் உள்பட
விலை ரூ 1.

எம். லீலா அண்டு கம்பெனி,
சௌகார்பேட்டை. மதராஸ்.

## முக்கிய புஸ்தகங்கள்,

| இங்கிலீஷ். | ரூ. | அ. |
|---|---|---|
| South Indian festivities. (எல்லா விரதங்களைப் பற்றியது.) | 7 | 8 |
| South Indian Shrines. (விசேஷ கோயில்களின் விவரங்களடங்கியது.) | 6 | 0 |
| Ramayana (எல்லாக் காண்டங்களும்) | 1 | 8 |
| Mahabarata (பதினெட்டு பருவங்களின் சங்கிரகம்) | 0 | 12 |
| Mattavilasam (ஏழாவது நூற்றாண்டின் மஹேந்திர வர்ம பல்லவராஜா எழுதிய நாடகம்.) | 0 | 8 |
| **தமிழ்.** | | |
| 'புராதன இந்தியா' (56 தேச விருத்தாந்தம்.) | 1 | 8 |
| 'விரதங்கள்' (இரண்டு பாகம்) | 1 | 0 |
| இராஜராஜ சோழன் சரித்திரம். | 0 | 8 |
| பாக சாஸ்திரம் | 0 | 8 |

வைத்தினுதன் பிரதர்ஸ்,
திருவல்லிக்கேணி, சென்னை.

மணத்தின் ஊற்று! வாசனையின் வித்து!!

# பரிமளப்பொக்கிஷம்.

எது?

கும்பகோணம்

பெரியகடை வீதி,

TRADE MARK PAT. RGT.

## K. அப்துல்ரஹியான் சாஹிப் & சன்ஸ்,

### பரிமளச்சாலை.

எமது பரிமளச்சாலையில் பரிமள வாசனைத்திரவியங்கள் எமது முன்னோர்களின் முறைப்படி அனுபவம்வாய்ந்த எங்களால் தயார்செய்து வழங்கப்பட்டுவருவது யாவரும் அறிந்ததே! எமது பரம்பரை வியாபாரப்பெருமையும், சாமான்களின் உயர்ந்த மணமும் அரசர்கள், ஜமீன்தாரர்கள், பிரபுக்கள், உயர்தர உத்தியோகஸ்தர்கள், மற்றைய நல்லோர்கள் பலராலும் கௌரவிக்கத்தக்கது என்பது ஒருமுறை வாங்கி அனுபவித்தவர்களுக்கு நன்கு விளங்கும். எம்மிடமுள்ள சகல பரிமளச்சாமான்களும் முனிசிரேஷ்டரான ஷேக்பரீத் சக்கரகஞ்ச் அவுலியா அவர்களால் தயாரிக்கப்பட்டு அனுபவசித்தி பெற்றன. எமது முன்னோர்கள் டில்லி அக்பர்சக்கிரவர்த்தியாருக்கும், தஞ்சை மன்னர்பிரானுக்கும் பரிமளப்பொருளை வழங்கினார்களென்பதையும், அம்முறைப்படியே நாம் இப்பொழுதும் தயாரித்துவருகிறோம் என்பதையும் தற்சமயம் தென்னாட்டிலுள்ள அரசர் குடும்பத்திலும், பிரபுக்களகத்திலும் நடக்கும் திருமணம்போன்ற மற்றுமுள்ள சுபகாரியங்களினிடையிலும், சந்தோஷ உல்லாச வைபவங்களினிடையிலும் எமது பரிமளத்திரவியங்களே நறுமணங் கமழவேண்டுமென்று விரும்பியே தொன்றுதொட்டு நாங்கள் கொண்டுள்ளமுறை ஒருசிறிதும் வழுவாதுசெய்து, அதிகலாபம் கருதாது யாவரும் முகமலர்ச்சியுடன் ஏற்கத்தக்கதாகவுள்ளன. (கேட்லாக் இனம்.)

1 சந்தனாதித்தைலம்
2 அரைக்கீரை விதைத்தைலம்
3 மணமிகுவீசும் பத்திகள்
4 புனுகு ஜவ்வாதுகள்
5 பஞ்சவர்ண பக்குவ கொப்பரைச்சீவல்
6 சற்குண ஸ்நானப்பொடி
7 சந்தன வில்லைகள்
8 சித்தர்விரும்பும் அத்தர் தினுகள்
9 வாசவர்மெச்சும் கேசர் பவுடர்
10 பரிமள பாக்குத்தூள்
11 மிக்குண பரிமள வில்லைகள்
12 மணமிகு அரகஜா
13 சுகந்த சந்தனப்பவுடர்
14 பக்குவமான பரிமளச்சுண்ணாம்பு
15 நற்குண பற்பொடி
16 ஈசனுக்குரிய தசாங்கம்
17 ரோஜாப்பூ குல்கந்து
18 சரிமண நறுமண கலவைச்சந்தனம்

N.B.—நாம் நமது சகோதரர்களுடன் K. தாவுத்சாஹிப் & பிரதர்ஸ் என்ற பரிமளச்சாலையின் வியாபாரப்பெருமையை இதுகாறும் மேலோங்க ஒத்துழைத்து வந்தோம். தற்சமயம் சகோதரர்கள் ஆணைப்படி நாம் பாகம் பிரித்துக்கொண்டு தனித்தொழில் நடத்துகிறோமாதலின், நம்மீது அன்புபூண்டுள்ள ஸ்ரீமான்கள் நமது பரிமளச்சாலையை ஆதரிக்குமாறு விரும்புகின்றோம். தங்களுடையவும், தங்கள் நண்பர்களுடையவும் அன்பார்ந்த ஆர்டரை எதிர்பார்க்கிறோம்.


:nted, at the Sri Krishna Vilàsa Press and Pu ... ·hsagaya Aiyer, Kumbakonam.